


The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 10, இதழ் - 1, ஜனவரி - பிப்ரவரி 2024



R5367

## KNOWLEDGE AND THE FAITH REGARDING CHRONOLOGY
## காலக்கணக்கைப் பற்றிய அறிவும் விசுவாசமும்

(அக்டோபர் 1, 1907 இல் வெளியிடப்பட்ட கட்டுரையை மறுபடியும் இங்கே வெளியிடுகிறோம்)

அறுவடை கிபி 1874இல் ஆரம்பித்து கிபி 1914 இல் வரும் உலகளாவிய உபத்திரவத்தில் தற்கால சகல ஸ்தாபனங்களும் கவிழ்க்கப்பட்டு, மகிமையின் ராஜா மற்றும் சபையாகிய அவரது மணவாட்டியும் சேர்ந்த நீதியான ஆளுகை நடக்கும் என்று விடியல் பாடங்களில் கொடுக்கப்பட்டுள்ள காலக்கணக்கு முற்றிலும் உறுதியானது என்பதை நம்பலாமா என்று ஒரு அருமையான சகோதரர் கேட்கிறார்.

எங்களது கணக்கீடு தவறே இல்லாதது என்றோ அது அறிவுப்பூர்வமானது, மறுக்க முடியாத ரூபகாரங்களையும் உண்மைகளையும் அறிவையும் அடிப்படையாகக் கொண்டது (Tower) என்றோ விடியல் (Dawn) மற்றும் கோபுரத்தில் (lown) வாய் மூலமாகவோ, கடிதம் மூலமாகவோ நாங்கள் சொன்னதேயில்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அவைகள் எல்லாம் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது என்று எப்பொழுதும் கூறுகிறோம். நாங்கள் முடிந்தவரை தெளிவான ரூபகாரங்களை வைத்து அதிலிருந்து விசுவாசத்தை இழுத்து முடிக்கிறோம். மற்றவர்களை அவர்களது இருதயங்களும் மூளைகளும் ஆமோதிக்கிற அளவுக்கு முடிந்த அளவுக்கோ அல்லது கொஞ்சமாகவோ ஏற்றுக்கொள்ளும்படி அழைக்கிறோம்.

அநேகர் இந்த ரூபகாரங்களை சோதித்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் அதை ஆமோதிக்கவில்லை. இதை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டவர்கள் விசேஷித்த ஆசீர்வாதங்களை, தீர்க்கதரிசனத்திற்கு இணக்கமான முறையில் அல்ல, கிருபை மற்றும் சத்தியத்தின் வழியில் விசுவாசத்தினால் பெற்றிருப்பதாக தெரிகிறது. காணமுடியாதவர்களை நாங்கள் கண்டிக்கவில்லை, ஆனால் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தி விசேஷித்த ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறவர்களுடன் நாங்கள் களிகூருகிறோம். "உங்கள் கண்கள் காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்."

நாங்கள் விடியல் (Dawn) மூலமாக வெளியிட்டிருக்கிற முடிவுகளை படித்திருக்கிற சிலர் பலமாக அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்களே பொறுப்புடையவர் -களாக இருக்கிறார்கள். நாங்கள் அளித்திருக்கிற வேத வாக்கியங்கள், பிரயோகம், விளக்கங்கள் முதலியவற்றை தேவனுடைய பிள்ளைகள் கவனமுடன் படித்து தங்களது தீர்மானத்தை எடுக்கும்படி நாங்கள் வற்புறுத்திக் கூறுகிறோம். எங்களது கருத்து தவறே இல்லாதது என்றோ, அதை ஏற்றுக்கொள்ளாதவர்களை திட்டவோ அல்லது அடிக்கவோ மாட்டோம் என்பதை வலியுறுத்திக் கூறுகிறோம். ஆனால் விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசமாயிருக்கிற அனைவரையும் "சகோதரர்களாக" கருதுகிறோம்.

மாறாக, எங்கள் கருத்துக்கு முரண்பட்டு, எங்களை அடிக்கிறவர்களாகவும் எங்களை தீமையாக பேசுகிறவர்களாகவும் இருக்கிறவர்களை, சுத்தியல்களுடனும் நாவுகளுடனும் நாங்கள் வரவேற்காததால், எங்கள் புரிந்து கொள்ளும் கண்களில் அவர்கள் காண்கிற பிழையை நீக்க நாடுகிறார்கள். எப்பொழுதும் தவறே இல்லாதவர்களாக தங்களை கூறிக்கொள்ளுகிற அவர்கள் எங்களது விமர்சர்களாக இருக்கிறார்கள். மற்றவர்கள் கேட்கிறார்களோ இல்லையோ? "நாங்கள் விசுவாசிக்கிறோம், ஆகையால் பேசுகிறோம்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தையையும் உதாரணத்தையும் நாங்கள் தாழ்மையாக பின்பற்றி செல்கிறோம். இது கிறிஸ்துவின் ஆவிக்கு இசைவாக இருக்கவில்லையா? "அவனை தடுக்க வேண்டாம்," "உனக்கென்ன, நீ என்னை பின்பற்றி வா" என்கிற கர்த்தரின் போதனைகளுக்கு இசைவாக இருக்கவில்லையா? (மாற்கு 9:39; யோவான் 21:22)

ஆனால் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத சிறிய காரியத்துக்கு வருகின்றவர்களில் சிலர், முழு அறுவடை வேலையும், அவர்களது சிறிய அல்லது சிறு துணுக்குகள் சரி செய்யப்படும் வரை, தூக்கி எறியப்பட வேண்டும் அல்லது நிறுத்தப்படவாவது வேண்டும் என்று நினைக்கிறதாக தெரிகிறது. அப்படிப்பட்டவர்கள் வெளியரங்கமாக சிறிய குன்றிலிருந்து மலையை செய்கிறார்கள்; கர்த்தருடைய ஜனங்களிடையே தற்கால இயக்கம், அறுவடை வேலை அல்லது கர்த்தருடைய மேற்பார்வையில் நடக்கிறது என்பதையும் கர்த்தரே பொறுப்பு என்பதையும் மறந்து விடுகிறார்கள். கர்த்தருடைய கட்டளைகளின் எழுத்து அல்லது ஆவியை மீறாமல் தங்கள் சொந்த வழியில் அவர்களது சொந்த முடிவுக்கு நிறைவேற்ற நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள்.

காலக்கணக்கை குறித்து அடிக்கடி கேள்விகள் வருவதால் வேதாகம பாடங்கள் தொகுதி II, பக்கம் 29இல் கொடுக்கப்பட்டுள்ள கடைசி பாராவை இங்கு கீழே கொடுக்கிறோம்.

"மனிதனின் சிருஷ்டிப்பிலிருந்து எவ்வளவு காலம் ஆகியிருக்கிறது என்ற கேள்வியைக் கேட்கும் ஆரம்பத்தில், இந்த தீர்க்கதரிசனங்களைக் கொடுத்து, இவைகளெல்லாம் கடைசி காலத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டியவைகள் என்று கூறிய தேவன், இந்த தீர்க்கதரிசனங்களை நாம் புரிந்து கொள்ளத் தேவையான குறிப்புகளை, அவருடைய வசனங்களில் கொடுத்திருக்கிறார் என்று நாம் முழுமையாக நம்பிக்கை கொள்ள வேண்டும். இதை மேலோட்டமாகப் படித்து, இதன் உண்மைகளை மிகவும் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும் என்று எதிர்பார்ப்பவர்களும், கிறிஸ்தவ கொள்கைகளின் மேல் நம்பிக்கை இல்லாமல்

வாசிப்பவர்களும், பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாவார்கள். தேவனிடம் பரிச்சயமாகி, அவரது சுபாவ குணங்களை உணர்ந்து கொண்டவர்கள் மட்டும், குறிப்பிட்ட காலத்தில் திருப்தியுடன் புரிந்து கொள்ளும் அளவுக்கு அவருடைய காலங்களும் வேளைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. "வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ மனுஷன் தேறினவனாயிருக்க அருளப்பட்டிருக்கிறது" என்ற நம்பகமான வார்த்தை 2 தீமோத்தேயு 3:16.17இல் கொடுக்கப்பட்டுள்ளது. கண்டு அல்ல, காணாமலே விசுவாசத்தினால் அவர்களுடைய பிதாவின் வழிகளிலே, அவர்கள் நடக்க வேண்டும் என்பதை இது நமக்கு அறிவுறுத்துகிறது. இப்படி தேவனுடைய வழியில் நடக்கத் தயாராய் இருப்பவர்களின் ஒவ்வொரு அடிச்சுவடும் உறுதியான விசுவாசத்தில் அமையும் பொருட்டு, தேவனின் வார்த்தைகள் இருக்குமென்று நாம் சுட்டிக்காட்டலாம்."

புனித வார்த்தைகளிலும் (வேதாகமம்) புனிதமற்ற சரித்திரத்திலும் கொடுக்கப்பட்டுள்ள "காலக்கணக்குகளின் இணைப்பு துண்டிக்கப்பட்டும் ஒன்று மேல் ஒன்று அமைந்தும் சிக்கலாகவும் ஆகி அவைகளிலிருந்து சரியான முடிவுக்கு வராதபடி குழப்பமாக இருக்கிறது. புதிய ஏற்பாடு இந்த குறையை நீக்காமல் இருந்தால், இதை வைத்துக்கொண்டு முன்னால் மற்ற பகுதிகளை நாம் சரியாக முடிவு செய்தது போல் இந்த காலப்பகுதியை சரியாக முடிவு செய்திருக்க முடியாது" என்பதை அதே அதிகாரத்தில் தொடர்ந்து குறிப்பிடுகிறோம். (பக்கம் 40 முதல் பாரா) இப்படியாக காலக்கணக்கானது உண்மையான புள்ளி விவரங்களின் மேல் கட்டப்படாமல் விசுவாசத்தின் மூலமே பெறப்படுகிறது என்று நிரூபிக்க நாடுகிறோம். ஆகையால் தொகுதி IIஐ மறுபடியும் முழுவதுமாக படிக்குமாறு உங்களை வலியுறுத்துகிறோம். இந்த யோசனைகள் மூலம் சிலர் நமது காலக்கணக்கில் நம்பிக்கை குறைந்தாலும், அநேகர் அவர்களது விசுவாசத்தில் அதிகமாக பலப்படுவார்கள் என்று நம்புகிறோம்.

காலக்கணக்கின் பலவீனமான புள்ளி விவரங்கள் பலவிதமான தீர்க்கத்தரிசனங்கள் மூலமாக ஆதரவு அளிக்கப்படுகிறது என்பதை நாங்கள் உங்களுக்கு நினைவு படுத்துகிறோம். அது குறிப்பிடத்தகுந்த விதத்தில் ஒன்றோடொன்று இணைந்து காலக்கணக்கை பற்றிய அறிவு சரியானது என்று விசுவாசிக்கும்படி செய்கிறது. ஒரு வருட மாற்றம் கூட இணையானவைகளின் அழகை நீக்கிப்போடும். ஏனெனில் தீர்க்கதரிசனங்களில் சில கிமுவிலிருந்து அளவிடுகிறது. சில கிபியிலிருந்து அளவிடுகிறது. சில இரண்டிலிருந்தும் அளவிடுகிறது. இந்த தீர்க்கதரிசனங்கள் "ஏற்ற காலத்தில்" புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக தேவன் தீர்மானித்திருந்தார். அவைகளை இப்போது புரிந்து கொள்கிறோம் என்று நாம் நம்புகிறோம். இந்த காலக்கணக்கு மூலமாக அவை நம்மிடம் பேசுகின்றன. அதன் காரணமாக அவை காலக்கணக்கை முத்திரையிட்டிருக்கவில்லையா? விசுவாசத்திற்காக அதை செய்கின்றன. வேறு எதற்காகவும் அல்ல.

நமது கர்த்தர் அறிவிக்கிறதாவது: "ஞானவான்களோ உணர்ந்து கொள்ளுவார்கள்." மேலும் நாம் அறிந்து கொள்ளும்படியாக "விழித்திருங்கள்" என்று நமக்கு கூறுகிறார். (விசுவாசத்தினால் பெறுகிற மற்றும் பெறக்கூடிய) நம்மை காலக்கணக்குதான் நம்ப வைக்கிறது. அதாவது முதல் சத்தம் 1844லும் "இதோ மணவாளன்" என்கிற இரண்டாவது சத்தம் 1874லும் கேட்கப்பட்டது என்று இப்பொழுது நிறைவேறிக் கொண்டிருக்கிற பத்து கன்னிகைகளின் உவமை நம்மை நம்ப வைக்கிறது. "சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல உங்களை பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்தில் இருக்கிறவர்கள் அல்லவே" என்கிற அப்போஸ்தலர் மூலமாக கொடுக்கப்பட்ட கர்த்தரின் வாக்குத்தத்தத்திற்கு இசைவாக நம்மை விழிக்க செய்து நமது தீவட்டிகளை ஆயத்தப்படுத்தச் செய்தது இந்த காலக்கணக்குதானே தவிர வேறு எதுவும் இல்லை.

நமது காலக்கணக்கு நம்பத்தகுந்ததாக இல்லாதிருந்ததால், நாம் எங்கே இருக்கிறோம், காலை எப்பொழுது வரும் என்பது குறித்து ஒரு எண்ணத்தையே நாம் பெற்றிருக்க மாட்டோம். நாம் குறிப்பிட்டிருக்கிறபடி (தொகுதி II பக்கம் 43) பிஷப் யுஷ்ஷரின் காலக்கணக்கு ஆறாயிரம் வருட முடிவை இன்னும் நூறு வருடங்கள் தள்ளிப்போட்டு நாம் இதுவரை பார்த்து அனுபவித்த தீர்க்கதரிசன பிரயோகத்தின் பலனை அழிக்கிறது. நாம் பயன்படுத்துகிற காலக்கணக்கு வேதாகம காலக்கணக்காகும். இது தேவனுடைய பிள்ளைகளுக்குரியது, அதை அவர்கள் அங்கீகரிக்கிறார்கள். உண்மையை சொல்லவேண்டும் என்றால், நமது காலத்திற்கு முன்னரே, நாம் காண்பித்திருக்கிற முறையில் அட்வன்டீஸ் (இரண்டாம் வருகை) சபையார் பல்வேறு தீர்க்கதரிசனங்களை வெவ்வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்தியிருக்கிறார்கள். மேலும் நமக்கு மிகவும் புதியதாகவும் வேறுபட்டதாகவும் காணப்படுகிற தேர்ந்தெடுத்தல், இலவச கிருபை, மறு சீரமைப்பு, நீதிப்படுத்துதல், பரிசுத்தமாக்குதல், மகிமைப்படுத்துதல், உயிர்த்தெழுதல் போன்ற பல்வேறு போதனைகள் நீண்ட காலத்திற்கு முன்பே ஏதோ ஒரு முறையில் வைக்கப்பட்டிருந்தன.

மீண்டும் கட்டுதல், சரி கட்டுதல், உகந்ததாக்குதல் போன்றவைகளைக் காட்டிலும் நமது தாழ்மையான திறமையை ஆரம்ப வேளையில் பயன்படுத்துவதையே கர்த்தர் விரும்புவார். இப்பொழுது இசை வருகின்ற கர்த்தருடைய வார்த்தையாகிய பெரிய வீணையின் நரம்பு சுருதி கூட்டப்படவில்லை. ஒரு சபை பிரிவு ஒரு நரம்பை மீட்டுகிறது. இன்னொரு சபை, தெரிந்தெடுத்தல், இலவச கிருபை, ஞானஸ்நானம், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, காலத்தீர்க்கதரிசனங்கள் முதலிய நரம்புகளை மீட்டுகிறார்கள். அவர்கள் சொந்த நரம்பை மீட்டுகிறார்கள். அதில் முரண்பாட்டினால் வெறுப்படைந்து அதிலிருந்து விலகும் வரை இசைத்தார்கள். பிறகு கர்த்தரின் மகா விசுவாசமுள்ள பின்னடியார்களுக்காக பழைய வீணையை சரி பண்ண அவரது நேரம் வந்தது. வீணையை மீண்டும் சுருதி மீட்டவோ அல்லது அவரது "சகோதரர்களது" கவனத்தை இழுக்கவோ, நம்மில் யாரையாவது எந்த அளவுக்கு மகா ஆண்டவர் பயன்படுத்தியிருந்தாலும், அதிலிருந்து சர்வ வல்லவரின் மகிமையில் காதுக்கினிய மெல்லிசையுடன் அவரது சலுகையை அனுபவித்து பயன்படுத்துவதால் அவரை போற்றுவோமாக.

கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த சரியான நேரத்தில் அவர் கதவை தட்டியவுடனே தயாராயிருந்து கதவை சீக்கிரத்தில் திறக்கிறவர்களுக்கு அவர், "நான் அவர்களிடத்தில் பிரவேசித்து, அவர்களோடே போஜனம் பண்ணுவேன்" என்று அறிவித்தபடி, "அவர் அரைக்கட்டிக்கொண்டு, சமீபமாய் வந்து அவர்களுக்கு ஊழியம் செய்வார்" (லூக்கா 12:37) என்கிற சரியான நேரத்தில் இந்த இசைவுக்கு நாம் வந்திருக்கிறோம் என்கிற உண்மை, நமது காலக்கணக்கின்படி கால தீர்க்கதரிசனங்களை சரியானபடி புரிந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு ரூபகரமாக இருக்கிறது. அவரது சபையின் இந்த மகா ஊழியக்காரருக்கு தற்கால சத்தியத்தின் இசைவான வெளிச்சத்திற்காக நாம் ஸ்தோத்திரங்களை செலுத்துவோமாக. காலக்கணக்கு மூலமாக வந்திருக்கிற

இந்த வெளிச்சம் கூட அவருடையது என்பதை நாம் கவனிக்காமலிருக்கலாமா?

ஆனால் நமது எதிர்பார்க்குதலுக்கு தூரமாயிருக்கிற ஒரு நிகழ்ச்சியை நாம் நினைப்போமாக. கிபி 1915 "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" அனைவரும் மறுரூபமடையாமலும், புதிய உடன்படிக்கையின் கீழ் மாம்ச இஸ்ரயேலர்கள் மறுசீரமைப்பு அடையாமலும் அமைதியாக கடந்து செல்லும் என்ற நினைக்கிறோம். (ரோமர் 11:12-15) பிறகு என்ன? நமது காலக்கணக்கு தவறு என்று அது நிரூபிக்கவில்லையா? ஆம், நிச்சயமாக! அது ஒரு பெரிய ஏமாற்றத்தை கொடுக்கவில்லையா? உண்மையிலேயே அது கொடுக்கும்! சரி பண்ண முடியாத சேதத்தை, இணையான யுகங்கள், இஸ்ரயேலின் இரட்டிப்பு, யூபிலி கணக்கீடு, தானியேலின் 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம், புறஜாதியாரின் காலம், 1260, 1290 மற்றும் 1335 நாட்களின் தீர்க்கதரிசனம் ஆகியவற்றிற்கு கொடுக்கும். இதில் கடைசியான நாள் (1335) அறுவடை காலத்தின் துவக்கம், ஆரம்பித்ததை குறிக்கிறது. "1335 நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்!" இவைகளில் எதுவும் நீண்ட காலம் இருக்காது. அது எப்படிப்பட்ட ஒரு அடி! நமது வீணையின் நரம்புகளில் ஒன்று முற்றிலும் அறுந்துவிடும்!

எனினும், அன்புள்ள நண்பர்களே, நமது வீணையின் மற்ற நரம்புகள் அனைத்தும் சுருதி கூட்டப்பட்டு இருக்கிறது. அது தான் பூமியில் வேறு தேவனுடைய பிள்ளைகளின் கூட்டமும் பெருமை பாராட்ட முடியாது. நாம் இன்னமும் பெரிய, மகா பெரிய தேவனை ஆராதிக்க முடியும். வேறு யாரையும் இவருடன் ஒப்பிட முடியாது. நாம் இன்னமும் அவரது இரட்சிப்பின் சிறப்பை, "எல்லாருக்குமான மீட்கும் பொருளை" கிறிஸ்துவில் நாம் காண வேண்டும். நாம் இன்னமும் "மறைக்கப்பட்டிருந்த இரகசியம்" "அவரது மரணத்தில்" நமது இரட்சகருடனான ஐக்கியம். "அவரது உயிர்த்தெழுதலில்" அவருடனான ஐக்கியம். "கனம், மகிமை, சாகாமை," "தெய்வீக சுபாவம்" ஆகியவற்றின் அற்புதங்களை நாம் காண வேண்டும்.

ஆகையால் அன்புக்குரியவர்களே, நமது காலக்கணக்கு எல்லாம் தவறு என்று முடிக்கப்பட வேண்டும் என்றால், அதிலிருந்து நாம் எல்லா வழிகளிலும் அதிக அனுகூலங்கள் பெற்றிருக்கிறோம் என்று தீர்மானிக்கலாம். நமது மகிமையான நம்பிக்கைகளையும் கர்த்தருக்குள்ளான சந்தோஷங்களையும் அடைதல் நமது நண்பர்கள் பயப்படுவது போல சேதமடைந்தால் நாம் களிகூர்ந்து அதை "மலிவானதாக எண்ண வேண்டும்!" "கன்னிகைகளை" எழுப்புவதற்கு எக்காலத் தொனியை தவறான காலத்தில் அனுமதிப்பது அவசியம் என்று கர்த்தர் கண்டால், அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களால் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு "சகலமும்" நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று நினைத்து அதை சந்தோஷமாக எடுத்துக்கொள்வோமாக. ஆனால் உவமையில் சொல்லப்பட்டபடி கன்னிகைகளின் இரண்டாவது எழுப்புதல் தவறானது அல்ல என்பதை நாம் நினைவில் கொள்ளுவோமாக! மணவாளன் வந்தார்! "புத்தியுள்ள கன்னிகைகள்" பின் தொடர தேவையான விசுவாசத்தை பெற்றிருந்தார்கள்; மற்றவர் உலக புத்திமான்களாக விசுவாசத்தில் குறைவுபட்டு, மணவாட்டி வகுப்பாருக்காக வைக்கப்பட்டிருந்த உயர்ந்த கனத்தை இழந்தார்கள். எனினும் அவர்கள் பிற்பாடு "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில்" மணவாட்டியின் தோழிகளாக கலந்துகொள்ள சலுகை பெற்றார்கள்.

தற்கால சத்தியத்தில் விஷம் கலந்த விசுவாசத்திற்கு சிறந்த மருந்து, **வேதாகம பாடங்களின் தொகுதிகளை** மறுபடியும் கவனத்துடன் பார்ப்பது ஆகும். அது தோல்வியடைந்தால், சிபாரிசு செய்ய வேறு எதுவும் இல்லை. இந்த வெளிச்சத்திற்குள் அனுமதிக்கப்படுவதற்கு நிபந்தனைகள் இருந்தன. அந்த வெளிச்சத்தில் இருப்பதற்கு அந்த நிபந்தனைகள் பராமரிக்கப்பட வேண்டும். ஆகையால், அந்த வெளிச்சத்தின் ஒரு பகுதி இருளடைந்தால், நம்முடைய கேள்வி, "நான் எனது உடன்படிக்கையின் நிபந்தனைகளாகிய சுயத்தை வெறுத்தல் மற்றும் சுய தியாகம் ஆகியவற்றின்படி வாழ்கிறேனா?" என்பதாகும். அதற்கான முரண்பாட்டை நாம் கண்டு பிடித்தால், நமது துன்பத்திற்கான உண்மையான இரகசியத்தை உடனே "கர்த்தரிடம் ஜெபத்தில் எடுத்துச் செல்ல வேண்டும்."

> "கர்த்தரின் மகிமையின் பிரசன்னத்தை என் கண்களால் காணமுடிகிறது;
> சேர்க்கப்பட்ட திராட்சப்பழங்களை அவரது கோபாக்கினை என்னும் ஆலையில் மிதித்துக்கொண்டிருக்கிறார்;
> நமது ராஜா அதி சீக்கிரமாய் பட்டயத்தோடு அக்கினியின் சுழல் காற்றிலே இறங்குகிறதை நான் காண்கிறேன்.
> ராஜா பவனி வருகிறார்.
> ஏழாம் எக்காளம் ஒலித்துக்கொண்டிருக்கிறது, நமது ராஜா தோல்வியை அறியார்.
> அவரது நியாயாசனத்திற்கு முன்னர் மனிதர்களின் இருதயங்களை சலிப்பார்.
> ஓ! என் ஆத்துமாவே, சலிக்கப்பட்டு அவரை வரவேற்க,
> என் பாதங்களே மகிழ்ச்சியாயிரு;
> நமது ராஜா பவனி வருகிறார்."

**R5368**

## LOVING RULES AND PARLIAMENTARY RULES
## அன்பின் விதிகளும் பாராளுமன்ற விதிகளும்

அகில உலக வேதமாணவ ஐக்கிய சங்கத்தின் அன்புக்குரிய நண்பர்கள் சபை மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான ஓட்டளிக்கும் காரியங்களிலும் மற்ற அனைத்து காரியங்களிலும் கர்த்தருடைய நாமத்தில் பொறுப்பை உணர்ந்தவர்களாக இருக்கின்றனர். பாராளுமன்ற விதிகளை சிலரே அறிந்திருக்கும் போது, அதை சபை கூட்டங்களில் வற்புறுத்துவது ஞானமற்றதாக இன்னும் அன்பற்றதாக இருக்கும் என்று நாங்கள் முன்னரே கூறியிருக்கிறோம். இந்த விதிகள் நிச்சயமாக நல்லதாகவும் ஞானமானதாகவும் பொதுவாக பிரயோஜனமானதாகவும் இருக்கின்றன. பாராளுமன்ற விதிகளின் ஆவி எல்லா இடங்களிலும் பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும்; ஏனெனில் அவைகள் அனைவருடைய நலன்களை பாதுகாத்தல் மற்றும் பிரச்சனை இல்லாமல் காரியங்களை நடப்பித்தலுக்காக பொன்னான பிரமாணத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டிருக்கின்றன.

எனினும் கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் அன்பானது எப்பொழுதுமே முதல் இடத்தை பெற்றிருக்க வேண்டும். அன்பானது எப்போழுதுமே பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக இருக்கும் பொழுது, அது நடுநிலையான நீதிக்கும் மேலானதை செய்வதற்கு சுயாதீனம் உடையதாக இருக்கிறது. ஆகையால் கர்த்தருடைய சகோதரர்கள் அனைவரும்

கொள்கை எதுவும் குறுக்கிடாத பட்சத்தில், மற்றவர்களுக்காக சுய விருப்பங்களை விட்டுக்கொடுக்க விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அன்பும், சந்தோஷமும், சமாதானமும் எல்லா சபைகளிலும் வியாபித்து இருப்பதே நோக்கமாக இருக்க வேண்டும்.

சமீபத்தில் வந்த அநேக கடிதங்களில் சபை தேர்தல்கள், முன் மொழிதலின் முறைகள் முதலானவைகளைக் குறித்த கேள்விகளும், வேதாகம பாடங்களின் தொகுதி 6இல் குறிப்பிடப்பட்டிருக்கும் முன் மொழிதல் முறையிலிருந்து சற்று வித்தியாசமான முறையை பயன்படுத்துவது சரியா அல்லது தவறா என்பது பற்றிய கேள்விகளும் கேட்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட எல்லா காரியங்களிலும் சபையின் விருப்பமே பிரமாணமாக இருக்கும் என்று பதிலளிக்கிறோம். இதை கர்த்தர் சபையிடம் விட்டிருக்கிறார். சபையானது தெய்வீக ஏற்பாடுகளை அதன் தீர்மானத்தின்படி பின்பற்ற முழு அதிகாரம் பெற்றிருக்கிறது.

சில சந்தர்ப்பங்களில் வாக்குச் சீட்டு மூலமாக மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுப்பது ஒரு நல்ல திட்டமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அந்த காலப்பகுதிக்கு எவ்வளவு பேர் தேவை என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். ஒரு வேளை அந்த வகுப்புக்கு இரண்டு மூப்பர்களும் ஐந்து உதவிக்காரர்களும் தேவையானதாக இருக்கலாம். ஆகையால் வாக்குச்சீட்டு மூலம் கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை அர்ப்பணம் செய்த ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும். அவன் இரண்டு மூப்பர்கள் பேரையும் ஐந்து உதவிக்காரர்கள் பெயரையும் சீட்டில் எழுத வேண்டும். இல்லையென்றால் அதில் எதிர்ப்பு இருந்தால் தனது இரண்டு வாக்குகளை ஒரு மூப்பருக்கும் ஐந்து வாக்குகளை ஒரு உதவிக்காரருக்கும் அல்லது அவர் விரும்பும் வழியில் அந்த வாக்குகளை பங்கிட்டுக் கொள்ளலாம். இந்த விதத்தில் சிறுபான்மையினர் மூப்பர்களாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்புகளை பெற்றிட முடியும்.

வாக்குப்பதிவு முடிவடைந்தவுடன் அதிக வாக்குகள் பெற்ற இரண்டு மூப்பர்களும், ஐந்து உதவிக்காரர்களும் சபையின் தேர்வாக கருதப்பட வேண்டும். அதன் பின்னர் வாக்களித்தல் ஒரு முறையானதாக இருக்கும். அதிக எண்ணிக்கையில் வாக்கு பெற்றிருப்பவர்களுக்கு கைகளை நீட்டுதல் மூலமாக வாக்களித்து ஏக மனதுடன் தேர்ந்தெடுப்பது பொருத்தமானதாகவும் சரியானதாகவும் இருக்கும்.

உங்களது சித்தத்தை எப்படி நிறைவேற்றலாம் என்பதல்ல, கர்த்தருடைய சித்தத்தை செய்ய வேண்டும் என்பதும் ஒவ்வொரு சகோதரனுக்கும், சகோதரிக்கும் எப்படி முழு வாய்ப்பினை கொடுப்பது, அந்த வாய்ப்பினை நீங்களும் பெறுவது என்பதும் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதை மறக்க வேண்டாம். எந்த வகையில் முடிவுகள் பெறப்பட்டாலும், பெரும்பான்மையானவர்களின் அல்லது சபையார் அனைவரின் தீர்மானத்தை வெளிப்படுத்தினால் அதுவே சட்டப்பிரகாரமாகவும் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இசைவானதாகவும் இருக்கும்.

"சகோதர அன்பு நிலைத்திருப்பதாக." சகோதரர்களுக்காக நமது ஜீவனை கொடுக்க நாடுவோமாக. நம்மால் கர்த்தருக்கு நேரடியாக ஊழியம் செய்ய இயலாது. சகோதரர்களுக்கு ஊழியம் செய்வதின் மூலமும், அவர்களிடத்தில் பொறுமை, தயவு மற்றும் அன்பை வெளிப்படுத்துவதின் மூலமும் நாம் மறைமுகமாக கர்த்தருக்கு ஊழியம் செய்யலாம்.

R5369

## THE GOOD SAMARITAN

## நல்ல சமாரியன்

லூக்கா 10: 25-37

"உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக." மாற்கு 12:31

வருட ஆரம்பத்திலிருந்து நமது பாடங்கள் நமது கர்த்தரின் கடைசி ஆறு மாத ஊழியத்தைப் பற்றியதாக இருக்கிறது. அவரது மரணம் நெருங்குகிறது என்பதை அறிந்திருந்தார். அதாவது வருகிற வசந்த காலத்தில் முதல் மாதம் பதினான்காம் தேதி மெய்யான பஸ்கா ஆடாக அவர் மரிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார். அவரது ஊழியம் ஜனங்களை விழிப்படையச் செய்வதற்காக மட்டுமே இருந்தது.

ஒரு வாரத்திற்கு முன்பு நாம் கவனித்த, நியமனம் பெற்ற எழுபது பேர் யோர்தான் முழுவதும் ஊழியம் செய்ய பரோயா பகுதிக்குள் அனுப்பப்பட்டனர். இயேசுவும் அங்கு அதன்பிறகு சென்றார். அவரது ஊழியத்தின் முழு நோக்கமும், அவர்களை சந்திக்குங்காலம் வந்திருந்தது என்ற உண்மையை அறிவதில் யூதர்களை விழிப்படையச் செய்வதேயாகும். நமது கர்த்தரின் மரண சமயத்தில் ஏறக்குறைய ஐந்நூறு பேர் சகோதரர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் இருந்தார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் நமக்கு அறிவிக்கிறார். இவர்களைத்தவிர பெந்தெகொஸ்தே நாளுக்கு பிறகு மேலே குறிப்பிடப்பட்ட சாட்சிகள் மற்ற கனிகளை பெற்றார்கள்.

பின்னர் எழுபது பேரும், பிதாவின் நாமத்தில் பிசாசுகளும் அவர்களுக்கு கீழ்ப்படிந்தன என்று அறிக்கையிட்டு சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தி திரும்பினார்கள். அவர்களது பிரதான சந்தோஷத்துக்கான காரணத்தை அறிந்து ஆண்டவர் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவர்களுக்கு கூறினதாவது: "பிசாசுகள் உங்களது கட்டளைக்கு கீழ்ப்படிகிறதைக் காட்டிலும், உங்களது நாமம் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறதற்காக சந்தோஷப்படுங்கள்." இது நமக்கும் பொருந்துவதாக இருக்கிறது. இரட்சிப்பு என்பது நமக்கான ஒரு சொந்த காரியம் ஆகும். கிரியைகளும் போதிப்பதும் நமது சொந்த இரட்சிப்புக்கு தற்செயலாக தொடர்புடையவைகளாக இருக்கின்றன. கிரியைகளுக்கான மாபெரும் காலம் எதிர்காலத்திற்குரியதாக இருக்கிறது. நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தபடி, பாவம் மற்றும் மரணத்தின் விலங்குகளை உடைத்து, சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை அளித்து. உலகத்தின் மனுக்குலத்தை சீர்திருத்தும் வேலையில் நமது இரட்சகருடன் இணைந்திருக்கக் கூடிய சலுகையை பெறுவோம்.

தேவன் திட்டமிட்டிருக்கிறதும் மேசியா தமது ராஜ்யத்தில் நிறுவப்போகிறதுமான மாபெரும் சமூக மற்றும் சன்மார்க்க வேலைகளை ஒப்பிடும் போது தற்காலத்தின் சமூக உயர்வுகள் எவ்வளவு போற்றத்தக்கதாக இருந்தாலும் அது பெரிய காரியமல்ல. ஆகையால் சகல தேவனுடைய ஜனங்களின் முதல் வேலை ஒரு சொந்த காரியமாக இருக்கிறது. அதாவது தற்கால பாடுகளிலும் வருங்கால மகிமையான வேலைகளிலும் ஒரு பங்கை பெறுவதற்கு, தெய்வீக அங்கீகாரத்தை பெறும்படியாக தங்களது சொந்த இருதயங்களை தயார்படுத்துவது ஆகும்.

இந்த இடத்தில் தான் இன்றைய நமது பாடம் திறக்கிறது. ஒரு நியாய சாஸ்திரி ஆண்டவரை சோதிக்கும்படியாக அவரிடம் கேட்டதாவது: "போதகரே, நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" அந்த நாட்களில் இஸ்ரயேலின் பிரமாணம் தேவனுடைய நியாயப்பிரமாணம் மட்டும் தான். ஒரு நியாயசாஸ்திரி மோசேயின் புத்தகங்களின் போதனைகளை

நன்கு அறிந்தவனாக இருப்பான். ஆகையால் இயேசு அந்த வேத பண்டிதரிடம் கேட்டதாவது: 'இந்த காரியத்தை நீ எப்படி புரிந்து கொள்ளுகிறாய்? நியாயபிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பதை நீ அறிவாய்!' நியாயசாஸ்திரி கூறிய பதிலாவது: 'நாம் கர்த்தரை முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு பலத்தோடும் முழு சிந்தனையோடும் அன்பு கூர்ந்து, நம்மிடத்தில் அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்புகூர வேண்டும்.' இயேசு இதை அங்கீகரித்து கூறியதாவது: "அப்படியே செய். நியாயப்பிரமாணத்தை கைக்கொள், நீ பிழைப்பாய். நீ சாகமாட்டாய்."

நியாயசாஸ்திரி அவன் அறியும் முன்னே பிடிபட்டான். நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள முடியாமல் இஸ்ரயேல் ஜனங்கள் நூற்றாண்டு காலமாக மரித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை அவன் அறிவான். எனினும் அவனும் மற்றவர்களும் நியாயப்பிரமாணத்தை கடைபிடித்து வருவதாக வெளியரங்கமாக கூறி வந்தார்கள். அவன் கூறி வந்தது போலவும் பொதுவாக பரிசேயர்கள் கூறிவந்தது போலவும் அவன் நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்கவில்லை என்பதை அவனுடைய சொந்த சாட்சியத்தைக் கொண்டே அவர் அவனுக்கு காண்பித்தார். அபூரண, விழுந்த போன மானிடர் தேவனுடைய பூரண நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள இயலாது என்பது உண்மை. ஏனெனில் ஒரு பூரண மனிதன் மட்டுமே அதை முழுமையாக கடைபிடிக்க முடியும்.

நியாயசாஸ்திரி தனது தோல்வியை அங்கீகரிப்பதற்கு பதிலாக தனது மோசமான விவாதத்திலும் தன்னை நீதிமானாக காண்பிக்க இயேசுவிடம் மறுபடியும் அவன் கேட்டதாவது: என்னைப் போல நேசிப்பதற்கு, "எனக்கு பிறன் யார்?" இயேசு பரிசேயர்களுக்கு எதிராக குறிப்பிட்ட காரியங்களில் இது ஒன்றாக இருந்தது. அதாவது அவர்கள் வெளியரங்கமாக பக்தியுள்ளவர்களாகவும், மத ஈடுபாடு உடையவர்களாவும், உபவாசிக்கிறவர்களாகவும், ஜெபிக்கிறவர்களாகவும் இருந்தார்கள்; ஆனால் இருதயத்தில் அநீதியுள்ளவர்களாகவும், விதவைகள் மற்றும் திக்கற்றவர்களிடம் அநியாயம் செய்து ஆதாயம் பெறுகிறவர்களாகவும் இருந்தார்கள்; தங்களைப் போல பிறரை நேசிப்பதில்லை. நியாயசாஸ்திரி, தேவனுடைய பிரமாணம் எல்லாரையும் பிறன் என்று கூறாமல் விசேஷித்த சிலரை மட்டும் கூறுகிறது என்று கூற முயற்சித்தான்.

எனினும் இயேசு அவனிடம் கூறினதாவது: 'நான் ஒரு உவமையை கூறுகிறேன். ஒரு மனுஷன் எரிகோவுக்கு சென்றான். அதிக ஜன நடமாட்டமில்லாத மலைப்பாதையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவனை வஸ்திரங்களை உரிந்து கொண்டு, காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப்போனார்கள். அப்பொழுது ஒரு ஆசாரியன், நியாயப்பிரமாணத்தின் உயர்ந்த பிரதிநிதி, அந்த வழியாக வந்தான்; அப்பொழுது அவனைக் கண்டு பக்கமாய் விலகிப்போனான். அதே போல் ஒரு லேவியன், நியாயப்பிரமாண ஊழியத்திற்கு, தேவனுடைய ஊழியத்திற்கு தொடர்புடையவர் அந்த வழியாக வந்து, அவன் கிட்ட சென்று பார்த்துவிட்டு எதுவும் செய்யாமல் சென்றான். பின்பு சமாரியன் ஒருவன், அந்நியன், யூதனே அல்லாதவன் அங்கே வந்தான்; அவனைக் கண்டு மனதுருகி, கிட்ட வந்து அவனது காயங்களைக் கட்டி, தன் மிருகத்தின் மேல் ஏற்றி ஒரு சத்திரத்துக்கு கொண்டு வந்தான். அங்கே அவனை பராமரித்தான். அவன் தனது நேரத்தையும், சக்தியையும் காயப்பட்டவனுக்கு தியாகம் செய்து அவனைக் கவனித்தான். இன்னும் அதிகமாக செய்தான். அவன் எருசலேமிலிருந்து திரும்பி வரும்வரை காயப்பட்டவனை கவனிக்கச் சொல்லி பணம் கொடுத்தான்.

இயேசு நியாய சாஸ்திரியிடம் கூறியதாவது: 'இப்பொழுது ஒரு கேள்வியை உன்னிடம் வைக்கிறேன். இவர்களில் யார் அந்த கள்ளரிடம் காயப்பட்டவனுக்கு பிறனாக இருந்தான்? இவர்களில் யார் நியாயப்பிரமாணத்தின்படி செய்தான், உனக்கு எப்படி தோன்றுகிறது?' நியாய சாஸ்திரி காயப்பட்டவனுக்கு இரக்கம் செய்தவனே பிறனுக்குரிய பிரமாணத்தின்படி செய்தான் என்று கூறினான். இயேசு அதற்கு பதிலாக நீயும் போய் அப்படியே செய் என்று கூறினார். அதாவது அவன், உதவி தேவைப்படுகிறவர்களிடம், துன்பத்தில் இருக்கிறவர்களிடம் தயவாயும், பெருந்தன்மையாயும், கவனமும் உள்ளவனாக இருக்க வேண்டும்.

**அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறது**

பிரமாணங்கள், கட்டளைகள் முதலானவைகளை தேவன் கொடுத்ததின் உண்மையான நோக்கத்தை நாம் நன்றாக ஞாபகத்தில் வைக்கிறோம். நமது முழங்கால்கள் முடங்குகிற அல்லது தலை வணங்குகிற எண்ணிக்கையிலோ, அவரை ஆராதிக்கிற காரியங்களில் நாம் எதைச் செய்தாலும் அவற்றில் தேவன் சந்தோஷப்படுகிறவர் அல்ல. நாம் அன்பு, தயவு மற்றும் பெருந்தன்மையின் நமது சொந்த ஆவியை வளர்ப்பதை காண்பதில்தான் கர்த்தர் சந்தோஷப்படுகிறார். "தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான்." (1யோவான் 4:10) அப்போஸ்தலர் கூறுவது போல, தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராதிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? தேவனிடத்தில் அன்பு கூருகிறான் என்பதை எப்படி அவன் அறிவான்? (1யோவான் 4:20) அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது என்று அப்போஸ்தலர் நமக்கு நன்றாக சொல்லுகிறார். (ரோமர் 13:10)

நாம் அன்பை வெறுமனே பெற்றிருந்தால், அது தேவனுடைய பிரமாணத்தை நிறைவேற்றி, நித்திய ஜீவனைக் கொடுக்கும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கே அன்பு பிரமாணத்தை நிறைவேற்றும். இயேசுவின் சீஷர்களாக ஆகிறவர்களுக்கு தேவன் ஒரு விசேஷித்த ஏற்பாட்டை செய்திருக்கிறார். அதாவது அவர்களது கறைகளை இயேசுவின் பலியின் புண்ணியம் மூடுகிறது. அவர்கள் தேவனுக்கேற்ற இருதய அன்பில் வளர்ந்து அதை உடையதாயிருந்தால் அது ஏற்புடையாக இருக்கும். ஏனெனில் அவர்களது அனைத்து குறைபாடுகளையும் கிறிஸ்துவின் பலி நல்லதாக ஆக்குகிறது. நாம் "பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோம்." "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற, நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுகிறது."

தெய்வீக மதிப்பீட்டில் நமது குணலட்சணத்தின் அன்பானது பிரதானமானதாக இருக்கிறது என்று பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். நமக்கு உண்டான யாவற்றையும் ஏழைகளுக்கு அன்னதானம் பண்ணினாலும் அல்லது தகுதியான காரியத்திற்காக நமது சரீரத்தை சுட்டெரிப்பதற்கு கொடுத்தாலும், அது அன்பினிமித்தம் அல்லது அன்பின் ஆவியினிமித்தம் இவைகள் செய்யப்படாதிருந்தால் தேவனுடைய பார்வையில் இவையெல்லாம் ஒன்றுமில்லாததாக கருதப்படும். (1 கொரிந்தியர் 13) கோபம், வன்மம், பொறாமை, பகைகள், சண்டைகள் போன்றவைகளை நீக்கிப்போட்டு, தயவு, சாந்தம், நீடிய பொறுமை, சகோதர அன்பு, அன்பு போன்ற குணங்களை அணிந்து கொள்ள வேண்டும் என்பது கிறிஸ்தவ ஜனங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பெரிய பாடமாக இருக்கிறது. நாம் இவைகளைச் செய்தால் நாம் விழுந்து போகவே மாட்டோம் என்றும் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்கு உட்படும் பிரவேசம் நமக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும் என்றும் பரிசுத்த பேதுரு அறிவிக்கிறார். (2பேதுரு 1:10.11)

R5370

## "BLESSED ARE THE MEEK"

## "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்"

"சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்கு தமது வழியை போதிக்கிறார்." சங்கீதம் 25:9

ஒரு பூரண மனிதனுக்குக்கூட தனது மார்க்கத்தைக் குறித்தும் தனது வழிகளைக் குறித்தும் தீர்மானிக்கவும் முடிவு செய்யவும் தெய்வீக வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. ஒரு பூரண மனிதன் அவன் தன்னைக் குறித்த தேவனுடைய சித்தத்தை முழுமையாக அறியாதபடியினால், தனது அளவான அறிவினிமித்தம் தவறு செய்யாதிருக்க தெய்வீக வழிகாட்டுதலும், மேற்பார்வையும் தேவைப்படும் போது ஒரு அபூரண மனிதனுக்கு இது இன்னும் எவ்வளவு அதிகமாக தேவைப்படுகிறது! நல்லவர்கள் மற்றும் கெட்டவர்கள், புத்தியுள்ளவர்கள் மற்றும் புத்தியில்லாதவர்கள் போன்ற அனைத்து மானிட வகுப்பினருக்கும் இப்படிப்பட்ட அறிவுறுத்தல்கள் தேவைப்படுகிறது. ஆனால் ஒரே ஒரு வகுப்பார் மட்டுமே அதை ஏற்றுக்கொள்ளும் சரியான மனோபாவத்தில் இருக்கிறார்கள். அந்த வகுப்பார் மட்டுமே வேத வாக்கியங்களின்படி சாந்த குணமுள்ளவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

தங்களை தாழ்ந்தவர்களாக உணருகிற சாந்த குணமுள்ளவர்கள், உயர்ந்தவர்களாக காணப்பட வேண்டியது அவசியம் என்று நாம் சொல்ல முடியாது. ஆதாம் அந்த சம்பவத்தில் சாந்தமாக இருந்திருக்க முடியாது. இயேசு சாந்தமாக இருந்திருக்க முடியாது. பரம பிதாவும் சாந்தமாக இருந்திருக்க முடியாது. பரலோக பிதாவானவர் சாந்தமாக இருக்கிறார் என்று வேத வாக்கியங்களின்படி சொல்லப்படாத போது, இயேசு சாந்தமாக இருந்தார். அவர் பிதாவின் தற்சொரூபமாக மாம்சத்தில் இருந்தார். ஆகவே பரம பிதாவும் சாந்த குணத்தை பெற்றிருக்கிறார், அகந்தையிலிருந்து வேறுபட்டிருக்கிறார் என்று நாம் யூகிக்கலாம்.

### பெருமையுள்ளவர்களை தேவன் எதிர்க்கிறார்

நமது கர்த்தர் கூறினதாவது: "நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்." நமது கர்த்தர் சாந்தமாக அதில் அவர் போதிக்கக்கூடியவராக இருந்தார். அவருடைய அந்த பரிபூரணத்திலும் அவர் கற்றுக்கொள்ள வேண்டியவைகள் இருந்ததை அவர் உணர்ந்தார். அவர் பட்ட பாடுகள் மூலம் கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டார். சாந்த குணத்தை அல்லது போதிக்கக்கூடிய குணத்தை பெற்றிருந்ததினால் தான் நமக்கு இரட்சகராக இருக்கக்கூடிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. இது இல்லாமல் அவர் நமது இரட்சகராக ஆகியிருக்கவே முடியாது என்று நாம் கருதலாம். இந்த குணம் இல்லாமல் இருந்தால், அவர் தன்னம்பிக்கையும் பெருமையும் உடையராக இருந்து பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்ற தயாராக இருந்திருக்க மாட்டார். ஆண்டவரைப் போலவே சபைக்கும் இருக்கிறது.

சரியானபடி இயக்கப்பட்ட சிறிய திறமைகள் கூட தவறாக இயக்கப்பட்ட பெரிய திறமைகளைக் காட்டிலும் அதிக மதிப்புமிக்கதாக இருக்கிறது. அதிகமான பெரிய திறமை சரியான அறிவும் வழிகாட்டப்படுதலுக்குறைவுபடுவதால் வாழ்க்கைப்பாதை தவறாக வழி நடத்தப்படுகிறது. வழிகாட்டப்படுதலின் குறைவினால், போதிக்கப்படுதலின் ஆவி குறைவுபட்டு, சிறந்த வழியை, பிதாவின் வழியை அறிந்து கொள்ளும் விருப்பத்தை குறைவு படுத்துகிறது என்று நாம் கருதுகிறோம். ஒரு புறஜாதி மனுஷன், அவன் சாந்தகுணமுள்ளவனாக இருந்தால் தனக்கு யாரும் போதிக்க தேவையில்லை என்று நினைப்பதைக் காட்டிலும் கர்த்தரின் சித்தத்தை அறியக்கூடிய சந்தர்ப்பத்தை அதிகமாக பெறுவான் என்பதை நாம் காணலாம். இதை எல்லாம் அறிந்தவர்கள் ஆரம்பத்தில் போதனைகளை பெற்றுக்கொள்ளும் நிலைமையில் இருப்பதில்லை.

பெருமையுள்ளவர்களை எதிர்த்து நிற்கிறேன் என்று கர்த்தர் அறிவிக்கிறார். அவர்கள் அவருடைய பிள்ளைகளாக இருந்தாலும் அவர்களை தூரத்தில் வைக்கிறார். பெருமையுள்ளவர்கள் கர்த்தருக்குள் நெருங்கி வர அனுமதித்தால் அது இன்னும் அவர்களை பெருமையுள்ளவர்களாக்கும். அவர்கள் ஒரு தூரத்தில் வைக்கப்பட்டால், அவர்கள் சாந்த குணமுள்ளவர்களாகவும் போதிக்கப்படக் கூடியவர்களாகவும் தாழ்மையுள்ளவர்களாகவும் ஆகக்கூடும். ஆகையால் எல்லாருக்கும் போதனை தேவைப்படுகிறது என்பதை காண்கிறோம். அதை பெற்றுக்கொள்ளும் நிலையில் இருப்பவர்கள் மற்றும் தம்முடைய தேவைகளை உணர்ந்தவர்கள் மட்டுமே அவர்களது வழியை, அவர்களது வாழ்க்கையின் மார்க்கத்தை தீர்மானிப்பதற்கு கர்த்தருடைய வழிகாட்டுதலை பயன்படுத்தும் மனோபக்குவத்திலே இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கையின் தற்கால மற்றும் வருங்கால காரியங்களை சரியான மதிப்பீடு செய்யும் சலுகைகளை பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு தம்முடைய குமாரனைப் பற்றிய அறிவுக்குள்ளும் அவரது அனைத்து ஆசீர்வாதங்களுக்குள்ளும் போதித்து வழிநடத்த கர்த்தர் பிரியமுள்ளவராயிருக்கிறார். அவர்கள் சாந்த குணத்தில் தொடர்ந்தால் அவர்களை தேவனுடைய சுதந்தரர்களாகவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உடன்சுதந்தரர்களாகவும் ஆக்குவதற்கு அவர் சாத்தியமுள்ளவராயிருக்கிறார். சாந்த குணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று வேத வாக்கியங்களில் நாம் வாசிக்கிறோம். அவர்கள் ஆபிரகாமின் வித்தாவார்கள். ஆயிரம் வருட ஆளுகையில் கீழ்ப்படிகிற அனைத்து மனுக்குலத்தினருக்கும் இவர்கள் மூலமாக ஆசீர்வாதம் செல்லும். ஆயிரம் வருட யுகத்தின் கடைசி சோதனைக்குப் பிறகு முழு உலகமும் போதிக்கக்கூடியதாக இருக்கும். தேவன் சகல ஞானத்தின் ஊற்றாக இருக்கிறார் என்கிற பெரிய பாடத்தை கற்றுக் கொண்டிருப்பார்கள். இந்த போதனை மூலமாக அவர்கள் பலனடைவார்கள்.

R5370

## "HIS SERVANTS SHALL SERVE HIM"

## "அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள்"

லூக்கா 8:1-3; 9:57-62; 10:38-42

"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ,
அதை எனக்கே செய்தீர்கள்." மத்தேயு 25;40

இந்த பாடத்திற்கான ஆரம்ப வசனம் இயேசு பேசின அனைத்து பிரசங்கங்களுக்கான திறவுகோலை நமக்கு அளிக்கிறது. அவருடைய ஒரு செய்தி தேவனுடைய ராஜ்யத்தை பற்றிய நற்செய்தியாகும். இது இன்னும் நற்செய்தியாகவே இருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களில் யாராவது, தேவனுடைய ராஜ்யமே சபைக்கான நம்பிக்கை மற்றும் உலகத்திற்கான நம்பிக்கையின் மையமாகவும் சாரமாகவும் இருப்பதை இன்னும் கற்றுக்கொள்ளவில்லை

என்றால் அவர் இன்னும் பயனுள்ள வகையில் வேதாகமத்தை வாசித்து நம்பிக்கை கொள்ளவில்லை என்பதே அர்த்தமாகும். யூதர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கு தயாரற்ற நிலையில் இருந்து, அவர்கள் அந்த ராஜ்யத்தில் மேசியாவின் அங்கத்தினர்களாக இருக்கக்கூடிய தகுதியிலிருந்து ஒரு தேசமாக புறக்கணிக்கப்பட்டனர். ஆனால் அனைவரும் புறக்கணிக்கப்படவில்லை. ஆகையால் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரும் தேவனுடைய புத்திரராகும்படி சுதந்திரம் கொடுத்தார் என்று நாம் வாசிக்கிறோம். இதை அவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் முதலில் வந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் ஜெனிப்பித்தலின் மூலம் அடைந்தார்கள்.

### உண்மையிலேயே இது நற்செய்தியே

அந்த தேவனுடைய புத்திரர்கள் உண்மையுள்ளவர்களாக இருப்பார்களானால் அவர்கள் சீக்கிரத்தில் இயேசுவுடன் இந்த பரலோக ராஜ்யத்தில் தேவனுடைய சுதந்தரராகவும் அவர்களது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும் இருப்பார்கள். இவர்களுக்கான கனமும் ஆசீர்வாதமும் பெரிதாக இருக்கும். ஏனெனில் அவர்கள் தங்கள் ஆண்டவரை போல இருந்து, அவர் இருக்கிற வண்ணமாகவே அவரை தரிசித்து அவருடைய மகிமையில் பங்கு பெறுவார்கள். இவைகள் மாத்திரமல்ல, அவர்கள் இந்த அன்பின் ஆவியை அபிவிருத்தி செய்தால், சாபத்தை நீக்கி, பாவம் மற்றும் மரண நிலைமைகளிலிருந்து மனுக்குலத்தை உயர்த்தி ஆசீர்வதிக்கும் ஆண்டவரின் மாபெரும் வேலையில் சம்பந்தம் உடையவர்களாக ஆவதற்கு தகுதியுடையவர்களாக இருப்பார்கள்.

இந்த பாடத்தில் சொல்லப்பட்டது போல இது உண்மையிலேயே நற்செய்தி தான்! "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று ஆண்டவரின் பிறப்பின் போது அறிவித்த அதே தேவதூதர்களால் இதே நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இப்படியாக இது சபையாகிய தேவனுடைய ஊழியக்காரர்களுக்கும் ஊழியக்காரிகளுக்கும் மட்டுமே நற்செய்தியாக இருந்திருக்கிறது. ஆனால் குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறக்கப்படும் போது அது அனைவருக்கும் நற்செய்தியாக இருக்கும். அவர்கள் மேசியாவின் ராஜ்யத்தில் மகிமையை காண்பார்கள்.

இயேசு இப்படியாக இராஜ்யத்தை அறிவிக்கும்போது, அவர் பணத்தை யாரிடமும் வருந்தி கேட்கவில்லை. பணம் வசூலித்தார் என்றோ அல்லது வேறு எந்த வகையிலாவது பணத்தை சேகரித்தார் என்றோ நாம் கூறமுடியாது. கிறிஸ்துவின் சீஷர்கள் இதே போல பணத்தை யாரிடமும் கேட்கக்கூடாது என்பது அநேகரின் யோசனையாக இருக்கிறது. அவர்கள் தங்களுக்கு உள்ளதையோ அல்லது மற்றவர்கள் தானாக விரும்பி கொடுப்பதையோ பயன்படுத்த வேண்டும். எனினும் இது ஒவ்வொருவரும் தனக்குள் முடிவெடுக்க வேண்டியதாக இருக்கிறது.

சொஸ்தமாக்கப்பட்ட மகதலேனா மரியாளிடமிருந்து ஏழு பிசாசுகளை கர்த்தர் துரத்தியிருந்தார். வேறு வார்த்தைகளில் சொல்லுவோமானால், மனநிலை பாதிக்கப்பட்டவர் –களுக்கான விடுதிகளில் காணப்படும் அநேகரின் நிலையில் இந்த பாவப்பட்ட ஸ்திரீயும் இருந்தாள். இவளுக்கு பிரச்சனை உடல் உறுப்புகளில் இல்லை. ஆனால் இவளைப் பிடித்திருந்த ஏழு விழுந்துபோன தூதர்களின் தொல்லையே இவளுடைய பிரச்சனையாக இருந்தது. வேதாகமத்தின் செய்திகளை நம்புகிறவர்கள் விழுந்துபோன தூதர்கள் இருக்கிறார்கள் என்பதை நம்ப வேண்டும். அதாவது இந்த ஆவியின் ஜீவிகளானது மனிதர்களை கட்டுப்படுத்துகிற அளவுக்கு மனுக்குலத்தின் மேல் தீமையான செல்வாக்கு உடையதாக இருக்கின்றன என்பதையும், இவைகள் மனவுறுதியினால் எதிர்க்கப்பட வேண்டும் என்பதையும் நம்ப வேண்டும். மரியாள் ஆஸ்திகள் உடைய ஸ்திரீ போல தெரிகிறாள். பிசாசுகளின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்பட்ட மரியாள், இயேசுவிடம் மிகவும் நன்றியுடன் இருந்து எல்லா சந்தர்ப்பங்களிலும் தன்னால் முடிந்த மட்டும் அவருக்கு மேலான சேவை செய்தாள். மற்ற கனமுள்ள ஸ்திரீகளும் இயேசுவுக்கு உதவி செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

### "முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ணட்டும்"

இயேசு மிகுந்த வரங்களை உடையவராக இருக்கிறார் என்றும் அவருடைய வாழ்க்கையில் தேவைகள் எல்லாம் சந்திக்கப்படுகின்றன என்றும் ஆகையால் அவர் ஐசுவரியமுள்ளவராக இருப்பார் என்றும் எண்ணி சிலர் அவரிடத்தில் இழுக்கப்பட்டார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவன் கர்த்தரிடம் கூறினதாவது: "ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின் பற்றி வருவேன்." ஆனால் இயேசுவை வரவேற்பதற்கு அநேக வீடுகள் இருந்தாலும் தமக்கென்று சொந்த வீடும் ஆஸ்தி எதுவும் இல்லை என்று இயேசு தெரிவித்த போது இவனுடைய ஆவல் வெளிப்படையாக தணிந்து போனது. நரிகளுக்கு குழிகளும் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு. ஆனால் மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையின் கீழ் இருக்கிற ஒரு தலைவரை பின்பற்றுவதற்கு மிகவும் உண்மையுள்ளவர்களைத் தவிர வேறு யாரும் ஈர்க்கப்பட மாட்டார்கள். ஐசுவரியம் அநேகரைக் கவர்கிறது. தரித்திரமோ சிலரை மட்டுமே கவர்கிறது.

இன்னொருவன் இயேசுவினிடத்தில் வந்து கூறியதாவது: "ஆண்டவரே, உம்முடைய சீஷர்களில் ஒருவனாக என்னை எண்ணிக்கொள்ளுங்கள். ஆனால் எனக்கு ஒரு தகப்பன் இருக்கிறார். அவர் மரிக்கும் வரை நான் அவரோடு இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்." அதற்கு இயேசு கூறிய பதில் பரம பிதாவுக்கு செய்யும் ஊழியமே முக்கியமானது என்று காண்பித்தது. அவர் அவனிடம் கூறியதாவது: "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும். நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கம் பண்ணு."

### இது விழிப்பதற்கான நேரமில்லையா?

தெய்வீக கண்ணோட்டத்தின்படி முழு உலகமும் ஏற்கனவே மரித்ததாக காணப்படுகிறது. ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட மரண தண்டனையானது அவரது அனைத்து பிள்ளைகளையும் உள்ளடக்கியது. ஜீவனை கொடுப்பவராகிய இயேசுவுடன் தற்காலத்தில் தொடர்புக்குள் வந்தவர்களையே ஜீவனை பெற்றிருக்கிறவர்கள் என்று வேத வாக்கியங்கள் அங்கீகரிக்கின்றன. இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களிடமிருந்து வாழ்க்கையை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்று ஆண்டவர் அறிவிக்கிறார். பூமிக்குரிய காரியங்களை கவனிப்பதற்கு உலகத்தில் அநேகர் இருக்கிறார்கள். ராஜ்யத்தை அறிவித்தல் மற்றும் ராஜ்ய வகுப்பாரை கூட்டிச் சேர்த்தல் போன்ற முக்கியமான மாபெரும் வேலையை சிலரே செய்ய முடியும்.

இதுதான் உலகத்திலேயே மிக முக்கியமான வேலை. ஏனெனில் அது தேவனுடைய வேலை. இந்த வேலையில் ஈடுபடுகிறவர்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாக இருக்கின்றனர். இந்த போதித்தலுக்கும் இந்த பலிக்கும் மிகவும் பாத்திரமானது தேவனுடைய இராஜ்யமாக இருந்தது என்பதை நாம் மறுபடியும் கவனிப்போமாக. அந்தோ பரிதாபம்! இந்தப் பிரசங்கங்கள் பிற்காலத்தில் இந்த திசையில் மிகவும் குறைவாக இருப்பது எவ்வளவு விநோதமாக இருக்கிறது! வேறு வார்த்தையில் சொல்வோமானால்,

இயேசுவும் அவரது சீஷர்களும் கொடுத்த சுவிசேஷ செய்தியானது தொலைந்து போய் விட்டது, மறக்கப்பட்டு விட்டது, புறக்கணிக்கப்பட்டு விட்டது. ஆண்டவரும் அவரால் நியமிக்கப்பட்டவர்களும் முதலாம் வருகையில் பிரசங்கித்த அதே செய்தியை பிரசங்கிக்கும் மாபெரும் சிலாக்கியத்திற்கு வேத மாணவர்கள் அனைவரும் விழிப்பதற்கான நேரம் இது அல்லவா!

### கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்

வேறொருவன் இயேசுவிடம் வந்து கூறியதாவது: "ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டு வரும்படி எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும். அதன் பிறகு உம்மோடு நான் ஊழியத்தில் இருப்பேன்." இயேசுவுக்கு ஏற்புடையதாக இராததால் அவர் பதிலாக கூறியதாவது: "கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டு பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்கு தகுதியுள்ளவன் அல்ல." பிறகு இந்த வார்த்தைகளின்படி கர்த்தரின் அர்ப்பணம் செய்திருக்கிற தற்கால ஜனங்களில் யார் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள்?

நாம் யாரையும் நியாயந்தீர்க்கக்கூடாது. நம்மை நாமே நியாயந்தீர்க்க வேண்டும். எனினும் ஒரு பொதுவான வழியில், அநேகர் பின்னால் திரும்பி பார்த்து, வாழ்க்கையின் வசதிக்கு விசேஷ ஏற்பாடுகளை செய்வது மாத்திரமல்ல, அதோடு கூட உலகத்தின் சந்தோஷங்கள், சொகுசுகள், அற்பமானவைகள் ஆகியவற்றிற்குள் வீழ்ச்சியடைந்து தேடக்கூடிய ஒன்றாக இருக்கிறது. கதவருகே, அருகாமையில் இருப்பதாக நாம் நம்புகிற அந்த மகிமையான மேசியாவின் ராஜ்யத்தில் அவருடன் ஒரு இடத்தில் இருக்க, ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களாக நம்மில் எவ்வளவு பேரை கர்த்தர் கருத்தில் கொள்ளுவார்? ஒரு கொள்கை அதில் இருப்பதாக தெரிகிறது. ராஜ்யத்தில் ஆசீர்வாதங்களை விரும்பி, மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களை வழங்குவதில் விருப்பங்கொண்டு ராஜ்யத்தின் அக்கறையில் மூழ்காமல் இருப்பவர்கள், மனுக்குலத்திற்கு செய்யப்பட வேண்டும் என்று கர்த்தர் வடிவமைத்துள்ள வேலையை நிறைவேற்றுவதற்காக உயிர்த்தெழுதலின் மாற்றத்திற்கு பாத்திரராக இருக்க மாட்டார்கள்.

மார்த்தாள் மற்றும் மரியாளின் சம்பவத்துடன் பாடம் முடிவடைகிறது. இருவரும் இரட்சகரை நேசித்தார்கள், ஆனால் தங்களது அன்பை வித்தியாசமாக வெளிப்படுத்தினார்கள். அவருக்கு உணவளிக்க மார்த்தாள் கொண்டிருந்த அக்கறையை அங்கீகரிக்காமலில்லை. ஆனால் அவர் மரியாளின் ஆவியை பாராட்டினார். அது ஜீவனுக்கான அருமையான வார்த்தைகளை கேட்கும்படி அவளை அவருடைய பாதத்தண்டைக்கு ஈர்த்தது. அவள் சிறந்த பங்கை தெரிந்து கொண்டாள் என்று இயேசு கூறினார். ஆகையால் நாம் அவருடைய வார்த்தைகளுக்கு ஆர்வத்துடன் கவனம் செலுத்துவதிலும், அவருடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட வழி நடத்தப்படுவதிலும் அவர் விசேஷமாக சந்தோஷப்படுகிறார் என்பதை நாம் அவருக்கு ஊழியம் செய்யும் போது நாம் மனதில் கொள்ள வேண்டும்.

இன்றைய பாடமானது, கர்த்தரின் ஊழியத்தின் பல்வேறு சந்தர்ப்பங்களில் செய்யும் விசேஷித்த ஊழியங்களைப் பற்றியதாகும். பிரியமான ஊழியமானது பிரியமான துதியைப் போல கர்த்தரிடத்தில் கொண்டிருக்கும் அன்பின் பலனாக வரவேண்டும். அவரை அதிகமாக நேசிக்கிறவன் அதிகமாக ஊழியம் செய்வான். இந்த வகையான ஊழியத்தை சம்பளங்களால் விலை கொடுத்து வாங்க முடியாது, துன்புறுத்தல்கள் அதை தடை பண்ணவும் முடியாது.

கர்த்தராகிய இயேசுவுக்கு தனிப்பட்ட விதத்தில் ஊழியம் பண்ண சிலாக்கியம் பெற்றவர்கள் உண்மையிலேயே பெரிய சிலாக்கியம் பெற்றவர்கள் ஆவர். கர்த்தரினால் தம்முடைய சகோதரர்கள் என்று அழைக்கப்படுகிறவர்களுக்கு செய்யப்படும் ஊழியங்கள் உண்மையில் கர்த்தருக்கு செய்ததாகவே இருக்கிறது என்று நமது ஆதார வசனத்தில் பொதுவான கொள்கையாக வைக்கப்பட்டுள்ளது என்பதை நிச்சயப்படுத்துகிறோம். இந்த கருத்து எவ்வளவு விலையேறப் பெற்றது, எவ்வளவு மதிப்புமிக்கது! கர்த்தருடைய வார்த்தையை உண்மையாக நம்புகிறவர்கள் அனைவரும் தங்கள் சகோதரருக்கு செய்யும் ஊழியங்களில் வைராக்கியமாக இருக்க வேண்டும் என்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது! அப்போஸ்தலர் கூறுவது போல, கிறிஸ்து அனைவருக்காகவும் மரித்தது போல, நாமும் நமது சகோதரர்களுக்காக ஜீவனை கொடுக்கவேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

R5371

## HOPE OF THE GOSPEL AGE
## சுவிசேஷ யுகத்தின் நம்பிக்கை

"சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும், கனத்தையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்." ரோமர் 2:7

இந்த சுவிசேஷ யுகத்தின் அழைப்பு கனம், மகிமை மற்றும் சாகாமைக்கு உரிய ஒரு அழைப்பாக இருக்கிறது. அப்போஸ்தலர் பேதுரு கூறுவது போல, "திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை நமக்கு (சபைக்கு)" தேவன் அளித்திருக்கிறார். (2 பேதுரு 1:4) நாம் "ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்" என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். இந்த நம்பிக்கைதான் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. நாம் அனைவரும் இந்த மாபெரும் பரிசை பெறுவோமா? முடியாது. சிலர் பின்வாங்கிப் போவார்கள். ஆனால் "நாமே கெட்டுப்போக பின் வாங்குகிறவர்களாயிராமல் ஆத்துமா (நமது ஜீவன்) ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்." (எபிரேயர் 10:39) பின் வாங்கிப் போகிறவர்கள் இரண்டாம் மரணத்திற்குள் போகிறார்கள். அவர்களுக்கு அழிவைத்தவிர வேறு எதுவும் வைக்கப்படவில்லை. அவர்கள் மிருகங்களைப் போல கெட்டழிந்து போவார்கள். (2பேதுரு 2:12)

நாம் ஷியோவிலிருந்து, கல்லறையிலிருந்து, பிரேதக் குழியிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறோம். தேவன் பின்னர் முழு மனுக்குலத்தையும் கூட விடுவித்து, சத்திய அறிவிற்குள் வரக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை அவர்களுக்குக் கொடுப்பார். மிகவும் குறைவான அளவிலானவர்களே இதுவரை பரிசுத்த ஆவியில் பங்கு பெறுகிறவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டுள்ளவர்கள் மட்டுமே இப்பொழுது வழங்கப்பட்டுள்ள இந்த காரியங்களை காணக்கூடியவர்களாக இருக்கிறார்கள். "உங்கள் கண்கள் காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் பாக்கியமுள்ளவைகள்." பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிற இந்த வகுப்பாரிடம் மட்டுமே தேவன் தற்காலத்தில் தொடர்பு கொண்டு வருகிறார்.

### “ஜெயங்கொண்டவர்களும் முற்றும் ஜெயங்கொண்டவர்களும்”

ஆனால் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட இவர்களிடையே ஒரு வித்தியாசம் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய கிரியையும் “அக்கினியினால்” சோதிக்கப்படும். சிலர் தெய்வீக வாக்குத்தத்தங்களின் பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கற்களினால் கட்டுவார்கள் என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். மற்றவர்கள் மரம், புல், வைக்கோல் ஆகியவைகளினால் கட்டினார்கள். ஆனால் இரண்டாவதாக கூறப்பட்ட வகுப்பார், “அக்கினியானது சோதிக்கும் போது” நஷ்டமடைவார்கள். ஆனால் அவர்களோ இரட்சிக்கப்படுவார்கள். (1கொரிந்தியர் 3:12-15) இறுதியாக, கர்த்தருடைய குணலட்சணத்தின் சாயலை பெற்றிருக்கிற புத்தியுள்ள கன்னிகளின் வகுப்பார் மட்டுமே “முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக எண்ணப்படுவார்கள்.” நமது இரட்சகரைப் போல சுய பலிக்குள் மனமுவந்து செல்கிறவர்கள் தான் “முற்றிலும் ஜெயங்கொண்டவர்கள்.” மற்றவர்கள் முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக கருதப்பட மாட்டார்கள். “ஜெயங்கொள்ளுகிறவனுக்கு ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன்.” இவர்கள் சாதரணமாக ஜெயங்கொள்ளுகிற -வர்களை விட மேலானவர்கள். இவர்கள் தான் ராஜரீக ஆசாரியர்களாவார்கள். இவர்கள் தான் சாகாமையை சுதந்தரித்துக் கொள்ளுபவர்கள். இவர்கள் உயர்ந்த ஆசீர்வாதத்தை பெறுவார்கள்.

வெளிப்படுத்துதல் 7:4,9 இல் இரண்டு வகுப்பார் நமது கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறதைக் காண்கிறோம். முதல் வகுப்பாரில் இஸ்ரயேலரின் பன்னிரண்டு கோத்திரத்தில், கோத்திரத்துக்கு பன்னிரண்டாயிரம் பேராக மொத்தம் நூற்றி நாற்பத்தி நான்காயிரம் பேர். “ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரை பின்பற்றுகிறவர்கள் இவர்களே.” சீயோன் மலையின் மேல் ஆட்டுக்குட்டியானவருடன் நிற்பவர்களும் அவருடன் சிங்காசனத்தில் உட்காருபவர்களும் இவர்களே. முதலாம் வருகையில் பல்வேறு இஸ்ரயேல் கோத்திரத்திலிருந்து பாத்திரவான்களாக இருந்தவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டார்கள். ஆனால் சுபாவ இஸ்ரயேலரில் முழு எண்ணிக்கையும் கிடைக்கவில்லை. “இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள். தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றைய தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்.” (ரோமர் 11:7)

இந்த சுவிசேஷ யுகத்தில் நூற்றி நாற்பத்தி நான்காயிரம் பேரை நிறைவு செய்ய இன்னும் தேவையானவர்களை தேவன் தெரிந்து கொண்டு நிறைவு செய்து கொண்டு வருகிறார். உள்ளே வருகிறவர்களை காலியான இடத்தில் நிரப்பிக் கொண்டு வருகிறார்.

அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்கள் என்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறிய வேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்.” “மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவ பக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார்.” (ரோமர் 11:25,26) மீட்கிறவர் சபையாகிய சரீரத்தின் தலையாகிய இயேசுவேயாகும். இஸ்ரயேலர்களாகிற அனைவரையும் ஆசீர்வதிக்கிறவர் இந்த மீட்பரேயாகும்.

வெளிப்படுத்தின விசேஷம் 7:9இல் திரள் கூட்டத்தாரை நமக்கு சித்தரித்துக்காட்டுகிறது. சகல ஜாதிகளிலும். கோத்திரங்களிலும், ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்த திரளான கூட்டத்தை அப்போஸ்தலர் யோவான் பார்த்ததாக நாம் வாசிக்கிறோம். அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட எண்ணிக்கையிலோ, மாறாத எண்ணிக்கையிலோ இராமல், வெறும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாக இருக்கிறார்கள். இவர்களுக்கான நடத்துதல்களில் அவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே தோய்த்து வெளுக்க வேண்டும் என்றும், அவர்கள் சிங்காசனத்தில் உட்காராமல் சிங்காசனத்திற்கு முன்பாக நிற்பார்கள் என்றும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள், சாகாமையை அல்ல. மணவாட்டி வகுப்பார் மட்டுமே உலகம் முழுவதிலும் வரப்போகிற ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள பாத்திரராக எண்ணப்படுவார்கள். அவர்கள் தங்கள் வஸ்திரங்களை உலகத்தின் கறைபடமால் வைத்துக்கொள்வார்கள். அதில் ஒரு கறையோ சுருக்கமோ விழுந்தால், உடனே பரம கிருபாசனத்தண்டைக்குச் சென்று இரக்கத்தையும் உதவியையும் தேவையான சுத்திகரிப்பையும் காண்கிறார்கள்.

### சபையில் இரண்டு வகுப்பார்

இவ்விதமாக சிறுமந்தை மற்றும் திரள் கூட்டம் என்று இரு வகுப்பார் சபையில் இருப்பதை நாம் காண்கிறோம். இவர்கள் அனைவரும் இஸ்ரயேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறிய இரவில் காப்பாற்றப்பட்டு, கடந்து போகப்பட்டு இஸ்ரயேலின் முதற்பேறானவர்களால் நிழலாக காண்பிக்கப்பட்டார்கள். ஆகையால் இவர்கள் அனைவரும் சபையின் முதற்பேறானவர்களாக இருப்பார்கள். ஆனால் இவர்களில் ஒரு பகுதியினர் கிறிஸ்துவின் மணவாட்டியாக தெய்வீக சுபாவத்தையும் ஒரு பகுதியினர் தேவதூதர்கள் பெற்றிருக்கிறதை போல நித்திய ஜீவனையும் பெறுவார்கள்.

ஆரம்பத்தில் பிதாவானவர் மட்டுமே அழியாமையை பெற்றிருந்தார். பிதாவானவரால் முதலில் ஜெனிப்பிக்கப்பட்டவர் லோகோஸ் ஆகும். இவர் தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆதியாகவும் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவராகவும் இருந்தார்; உண்டானதெல்லாம் அவர் மூலமாகவே உண்டாயிற்று. பரிசுத்த யோவான் நமக்கு கூறுகிறதாவது: “ஆதியிலே லோகோஸ் இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.” ஆகையால் தேவதூதர்களும், கர்த்தத்துவங்களும், வல்லமைகளும் சேராபீன்களும், கேருபீன்களும் இன்னும் மனிதர்களும் லோகோசுடைய நேரடியான சிருஷ்டிகளாக இருந்தார்கள். ஆனால் அவரது சொந்த வல்லமையினால் இல்லை. (யோவான் 1:1-3)

சகலமும் பிதாவினால் உண்டாயிருக்கிறது; குமாரன் மூலமாக சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். முதலாவது யேகோவா தேவனே தெய்வீக சுபாவத்தில் இருக்கிறார்; இரண்டாவதாக நமது கர்த்தராகிய இயேசுவும் மூன்றாவதாக ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய சபையும் தெய்வீக சுபாவத்தில் இருப்பார்கள். திரள் கூட்டமானது ஆவியின் தளத்தில் இருக்கும், ஏனெனில் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறது.

**R5372**

## SALVATION - UNIVERSAL AND LIMITED

## இரட்சிப்பு – உலகளவிலானது மற்றும் வரையறுக்கப்பட்டது

"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் செய்வார்கள்." 1தீமோத்தேயு 2:4

இந்த வேத வாக்கியம் இரட்சிப்பு உலகளவிலானது என்று போதித்தாலும், மற்ற வேதவாக்கியங்கள் முடிவில் அழிக்கப்படுகிற ஒரு வகுப்பாரைக் குறித்தும் பேசுகிறது. இந்த வேத வாக்கியங்களை நாம் இசைவுபடுத்த முயற்சிக்கும் போது, பல்வேறு வகையான இரட்சிப்பு இருப்பதை நாம் கவனிக்கிறோம். உதாரணத்திற்கு காலையில் ஒரு மனிதன் பற்றி எரிகிற கட்டடத்திலிருந்து காப்பாற்றப்படலாம், பிற்பகலில் குளத்தில் மூழ்குவதிலிருந்து காப்பாற்றப்படலாம். அடுத்த நாள் அவன் திவாலா ஆன பேங்கிலிருந்து, பொருளாதார ஆபத்திலிருந்தும் பின்னர் வேறு ஒன்றிலிருந்தும் காப்பாற்றப்படலாம்.

மானிட குடும்பத்தில் ஒரு பொதுவான கஷ்டம் இருக்கிறது. முழு மனுக்குலமும் பாவத்திற்கு கீழாக விற்கப்பட்டது. பரிசுத்த பவுல் இந்த காரியத்தைக் குறித்து எழுதும் போது கூறுகிறதாவது: "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவம் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று." இது மாபெரும் பேரழிவாக இருக்கிறது. தேவன், இயேசுவை சகல மனுக்குலத்திற்கும் ஜீவனை கொடுப்பவராக அனுப்பினார் என்றும் அவர் அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவராக மரித்தார் என்றும் வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. "மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று." "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்.......... எழுந்திருக்கிறவர்களாக புறப்படுவார்கள்." (யோவான் 5:25.28.29) தேவன் "எல்லா மனுஷருக்கும் இரட்சகர்" என்று அப்போஸ்தலர் கூறினபோது மரித்தோரின் இந்த உயிர்த்தெழுதலை மனதில் வைத்திருந்தார்.

முழு மனுக்குல குடும்பமும் ஆதாம் இருந்த அதே நிலைக்கு கொண்டு வரப்படும் என்று நாம் கற்பனை செய்வோமானால், அது நித்திய ஜீவனைத் தான் குறிக்கும் என்பது அவசியமில்லை. ஆதாம் பூரணராக இருந்தார். எனினும் மரணத்திற்குள் விழுந்தார். ஆதாமின் இனம் தண்டனையிலிருந்து முற்றிலுமாக மீட்கப்படும் போது, ஆதாமைப் போல சோதனைக்குள் வைக்கப்படுவார்கள். அப்பொழுது யாராவது தேவனுக்கு கீழ்ப்படியாமற் போனால் நித்திய ஜீவன் அவர்களுக்கு அளிக்கப்படாது. கிறிஸ்து உலகத்தை மீட்டு ஆயிரம் வருட யுக ஆரம்பத்தில் அவரது மத்தியஸ்த ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அது மனிதனை பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கும் நோக்கத்திற்காக ஆகும். அப்பொழுது பாவத்தை தேர்ந்தெடுக்கிறவர்கள் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை தேர்ந்தெடுப்பார்கள். நீதியை தேர்ந்தெடுக்கிறவர்கள் பரிசாகிய நித்திய ஜீவனை தேர்ந்தெடுப்பார்கள். ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவனுக்கான வாய்ப்பு கொடுக்கப்படும். ஏனெனில் ஆதாமின் மேல் வந்த தண்டனையிலிருந்து கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டார்கள். தண்டனையாகிய நித்திய மரணமோ அல்லது பரிசாகிய நித்திய ஜீவனோ கொடுக்கப்படுவதற்கு முன்பு அவன் முதலாவது விடுவிக்கப்பட வேண்டும்.

"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் (மரண நிலைமையிலிருந்து, கல்லறையிலிருந்து மீட்கப்படுதல்) சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாக (சரியான விலைக்கிரயம்) தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே. இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது." இங்கே சொல்லப்படுகிற பொதுவாக உலகத்திற்கான ஏற்ற காலம் மேசியாவின் ஆளுகையின் காலமாகும். சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஆனால் இந்த யுகத்தில் விசேஷமாக ஆசீர்வதிக்கப்படுகிற ஒரு வகுப்பார் இருக்கிறார்கள். " உங்கள் கண்கள் காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்." இப்பொழுது இந்த ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிற நாம், தெய்வீக சுபாவமாகிய கனம், மகிமை மற்றும் சாகாமையில் நமது கர்த்தருடன் உடன் சுதந்தரராகும் கிருபையான சந்தர்ப்பத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

**R4740**

## THE PRAYER - ANSWERING GOD

## ஜெபம் – தேவன் பதிலளிக்கிறார்

1 ராஜாக்கள் 18: 1-40

"யாரை சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்." யோசுவா 24:15

பஞ்சத்தை நீக்கும் நோக்கத்துடன், எலியா தன்னை ஆகாப் ராஜாவுக்கு காண்பிக்கும்படி மூன்றாம் வருடத்திலேயே கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு வந்தது. இது தீர்க்கத்தரிசி எலியா சாறிபாத்தில் தங்கியிருந்த மூன்றாம் வருடமாக இருக்கலாம். அல்லது எலியா, ஆகாப் ராஜாவுக்கு அறிவித்த பிறகு மூன்றாம் வருடமாக இருக்கலாம். தேவனுடைய ஊழியனாகிய நான் மறுபடியும் மழையை அறிவிக்கும் வரை அல்லது கொண்டு வரும் வரை மழையில்லாதிருக்கும் என்று தீர்க்கதரிசி எலியா அறிவிக்கும் போது இஸ்ரயேல் தேசமானது முன்னரே ஆறு மாத பஞ்சத்தை அனுபவித்திருந்தது. எல்லா பதிவுகளிலும் பஞ்சத்தின் காலப்பகுதி மூன்றரை வருடங்கள் என்று நாம் உறுதி பண்ணப்பட்டிருக்கிறோம். (லூக்கா 4:25; யாக்கோபு 5:17)

காலம் நிறைவேறினபோது தேவன், எலியாவை ஆகாப் ராஜாவிடம் காண்பிக்கும்படி கட்டளையிட்டார். ஏனெனில் அப்பொழுது பஞ்சத்தை நீக்கும்படி தேவன் விரும்பியிருந்த காலம் வந்திருந்தது. அப்பொழுது இஸ்ரயேலர்களின் மேல் அவர்களது அக்கிரமங்களுக்கான போதுமான தண்டனை வந்திருந்தது. அவர்களில் சிலராவது சிந்தித்துப் பார்த்து, கர்த்தருடனான அவர்களது உடன்படிக்கையையும் அவர்களது கீழ்ப்படிதலுக்குதக்கதான ஆசீர்வாதங்கள் அல்லது துன்பங்களுக்கான வாக்குறுதிகளையும் நினைவு கூர்ந்தார்கள். எலியா அரண்மனைக்கு வந்த போது அரண்மனை அதிகாரியாகிய ஒபதியாவை சந்தித்தார். அவன் தெய்வ பக்தியுள்ளவனாகவும், ராஜா மற்றும் ராணியின் விக்கிரக ஆராதனையில் மிகவும் மனவுளைச்சல் அடைந்தவனாகவும் இருந்தான். அதை அவன் வெளிப்படையாக சொல்ல தைரியமில்லாதவனாக இருந்தாலும், அவன் தைரியசாலியாக இருந்தான். ஏனெனில் ஒரு தடவை ராணி யேசபேல், யேகோவாவின் ஊழியர்களை சங்கரித்த போது ஒபதியா அவர்களில் நூறுபேரை ஒளித்து வைத்து, அவர்களுக்கு தேவையானவைகளை கொடுத்து பராமரித்து வந்தான். இதையெல்லாம் ஆபத்தை உணர்ந்துதான் செய்தான். ஒபதியா எலியாவை சந்தித்து, எலியா ராஜாவைக் காண வந்திருக்கிறதாக சொல்லச் சொன்னபோது, ஒபதியா அப்படிச் செய்ய பயந்தான். ஒபதியாவும் மற்றவர்களும் தேசம் முழுவதும் மிகவும் ஜாக்கிரதையாக எலியாவை தேடினபோது காணப்படவில்லை என்று கூறினான். தேவன் எலியாவை மறைத்து வைத்திருந்தார் என்று உணர்ந்தான். இப்பொழுது எலியா, ராஜாவை காண தயாராயிருக்கிறார் என்று அறிவித்து, ஒரு வேளை அந்த சமயத்தில் ராஜா அங்கு வரும் போது தேவனுடைய ஆவி அல்லது வல்லமை எலியாவை

எங்கேயாவது கொண்டு போகலாம் என்று நினைத்து இதை ராஜாவுக்கு அறிவிக்க எதிர்ப்பு தெரிவித்தான். பிறகு ராஜா ஒபதியாவை கொன்று போடலாம். ஆனால் எலியா மறுபடியும் உறுதியளித்தார்.

ராஜா, எலியாவை சந்தித்த போது அவன் பேசிய முதல் வார்த்தை, "இஸ்ரயேலை கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா?" இது உலக வழக்கமாக இருக்கிறது. பயமில்லாத ஊழியக்காரன், இந்த துன்பத்திற்கு காரணம் தீமை செய்ததற்கான பரிசு என்று தெய்வீக தீர்க்கதரிசனத்தை சம்பந்தப்படுத்தி சத்தியத்தை கூறுகிறார். ஆனால் எலியா மிரளவில்லை. அவர் உடனே கூறிய பதிலாவது: "இஸ்ரயேலைக் கலங்கப் பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரயேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்." மூன்று வருடங்களுக்கு முன்பு ராஜா, எலியாவை கொல்லும்படி ஒரு வேளை கட்டளையிட்டிருப்பான். ஆனால் அவருடைய வார்த்தையின் நிறைவேறுதல், பட்டினித் துன்பம் அவனை பணியும்படி செய்தது. எலியா அந்த கட்டளையை நீக்கிப் போட வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார். மேலும் அவர் கர்மேல் பர்வதத்தில் பாகால் விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் எண்ணூற்றி ஐம்பது பேரையும், இஸ்ரயேல் புத்திரர் அனைவரையும் அவர்களது தலைவர்களையும் கர்மேல் பர்வதத்தில் கூடும்படி கட்டளையிடச் சொன்னார். இந்த திட்டம், தேவனுடைய பிரதிநிதியாகிய எலியாவுக்கும் ராணி யேசபேலின் ஆதரவாளர்களாகிய பாகாலின் கொலைகார தீர்க்கதரிசிகளுக்கும் ஒரு போட்டிக்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

### "இந்த நாளில் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்"

பாகாலின் தீர்க்கதரிசிகளை கூட்டிச் சேர்க்க காலம் தேவைப்பட்டாலும், முடிவாக அது நிறைவேற்றப்பட்டது. கூட்டம் கூடினபோது, யேகோவா தெய்வமா அல்லது பாகால் தெய்வமா என்பதை சோதிக்கவும் காண்பிக்கவும் அதுதான் நேரமாக இருந்தது என்று எலியா கூறினார். இரண்டு பலிபீடங்களை ஏற்படுத்தி இரண்டு காளைகளை பலியிட வேண்டும் என்பதே சோதனை. பாகால் தீர்க்கதரிசிகள் அவர்களே காளையை தெரிந்து கொண்டு பலிபீடத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். எந்த தேவன் பலியை அக்கினியினால் ஏற்றுக்கொள்ளுகிறாரோ அவர் தான் உண்மையான தெய்வம். இந்த போட்டி சரியானதாகவும் நியாயமானதாகவும் இருந்ததால் பாகாலின் தீர்க்கதரிசிகளால் மறுக்க முடியாமல் போனது.

அவர்களுக்கு முதலாவது சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. பாகால் தீர்க்கரிசிகள் சூரியனின் நடுப்பகல் வெப்பத்தால் காளையின் கொழுப்பை தகனிக்கும் சந்தர்ப்பத்தை பெற்றார்கள். அவர்கள் ஜெபித்தார்கள்; சத்தம் போட்டு கத்தினார்கள். கத்தியினால் தங்களை கீரிக் கொண்டார்கள். பாகால் அக்கினியினால் பதிலளித்து தன்னை வல்லமையுள்ள தேவன் என்று காண்பிக்கும் என்று எதிர்பார்த்தார்கள். மணிக்கணக்காக அவர்கள் முயற்சித்து மாலை நேரம் ஆயிற்று. அப்பொழுது தங்கள் இயலாமையை அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டிய நேரம் வந்தது.

எலியாவின் முறை வந்தது. அவர் தயார் பண்ணின பலிபீடத்தில் தண்ணீர் ஊற்ற கட்டளையிட்டார். இரகசியமான அக்கினி அங்கே இருக்கிறது என்று யாரும் சந்தேகிக்கக் கூடாது. சூரியனும் கீழே சென்றது. சூரிய வெப்பத்தினால் தீப்பற்றும் என்று யாரும் கூற முடியாது. பிறகு எலியா அமைதியாக, ஊக்கமாக பக்தியுடன் ஜெபித்தார். தெய்வீக பதில் வந்தது. வானத்திலிருந்து அக்கினி வந்து பலியை சுட்டெரித்து பலிபீடத்தில் இருந்த தண்ணீரையும் நக்கிப் போட்டது.

ஜனங்களும் வித்தியாசத்தை ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் முகங்குப்புற விழுந்து, கர்த்தரே தெய்வம்! கர்த்தரே தெய்வம் என்று கூறினார்கள். ஒருபெரிய பாடம் கற்றுக்கொள்ளப்பட்டது.

அப்பொழுது திரளான இஸ்யேலர்கள் வஞ்சிக்கப்பட்டது போல, இன்றைக்கும் திரளான கிறிஸ்தவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள் என்பது ஒரு பாடம். சீக்கிரத்தில் மேசியாவின் ராஜ்யத்தின் பிரதிநிதிகள் மூலமாக அவர்களது அறிவின் கண்களை தேவன் திறப்பார். முழங்கால் யாவும் முடங்கி, நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும். கர்த்தரை அறிகிற அறிவினால் பூமி நிறைந்திருக்கும்.

இஸ்ரயேலர் எலியாவின் மூலம் கர்த்தரின் கட்டளைக்கு இணங்கி பாகால் தீர்க்கதரிசிகள் அனைவரையும் கொன்று போட்டார்கள். இதன் மூலம் இன்றைக்கு இருக்கிற கள்ள போதகர்களை நாம் கொன்று போட வேண்டும் என்று புரிந்துக் கொள்ளக் கூடாது. இஸ்ரயேலர்கள் ஒரு விசேஷித்த ஜனங்கள் என்பதையும், அவர்கள் தேவனுடன் ஒரு விசேஷித்த விதத்தில் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதையும் அவர்களது பெரும்பாலான செயல்பாடுகள் தெய்வீக வழி நடத்துதலின்படி இருந்தது என்பதையும், இவைகளெல்லாம் தேவனுடைய ராஜ்யத்தில் நிறைவேறப் போகிற மேலான காரியங்களுக்கு நிழலாக இருந்தன என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். முடிவாக முழு சந்தர்ப்பத்திற்கு பிறகு, கள்ள போதகர்களும் தெரிந்தே பாவம் செய்தவர்களும் அழிக்கப்படுவார்கள். "சகல துன்மார்க்கரையும் தேவன் அழிப்பார்." பாகாலின் அந்த தீர்க்கதரிசிகளின் மரணம், அக்கிரமஞ் செய்தவர்களின் இரண்டாம் மரணத்தை நிழலாக முன் குறித்தது. ஆனால் அந்த பாகாலின் தீர்க்கரிசிகள் இரண்டாம் மரணத்தை அடையவில்லை. ஆதாமின் மீந்திருக்கிற அனைத்து இனத்தாரைப் போல, அவர்களது மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் கல்வாரியில் அளிக்கப்பட்டது. மேலும் அவர்கள் மற்றவர்களைப் போல சத்தியத்தை அறிகிற அறிவுக்கு கொண்டு வரப்படவும், தேவனுடன் ஒப்புரவாகுதலுக்கான ஒரு சந்தர்ப்பமும் கொடுக்கப்பட வேண்டும். இந்த கண்டனத்தை தொடர்ந்து நீண்ட காலம் விரும்பப்பட்ட மழையாகிய சரீரபிரகாரமான இளைப்பாறுதல் மாத்திரமல்ல தெய்வீக கிருபையும் வந்தது. அது தீமையின் மேலும் நன்மையின் மேலும் விழுந்து, இரண்டும் நன்மையாக ஆக்கப்பட்டது.

"உன் வழியில் மேகம்பலமாக தொங்கும் போது,
களைப்புற்ற நாளில் கருமை பெருகி,
கவலையான அக்கறையினால் ஒடுக்கப்பட்டு,
விரக்தியான நிலையை அடையும் போது,
இன்னும் கர்த்தருக்கு காத்திரு."

"உனது அன்பான நம்பிக்கையை நண்பர்கள்
காட்டிக்கொடுக்கும் போது,
நீ தாழ்மைப்பட்டு புழுதியில் கிடக்கும் போது,
சந்தோஷம் உன்னைவிட்டு பறந்து போய்
நம்பிக்கைகள் உனது இருதயத்திலேயே மரித்த போது
இன்னும் கர்த்தருக்கு காத்திரு.

"உன் கவலை எதுவாக இருந்தாலும்,
அவரது வார்த்தையை நம்பு,
சந்தோஷத்திலும், துக்கத்திலும் கர்த்தரில் நம்பிக்கை வை,
அவர் உனக்கு நல்ல தைரியத்தை தருவார்.
உண்மையிலேயே உனது இருதயம் பலமடையும்
கர்த்தருக்கு காத்திருப்பதினால்."

R4741

## A DISCOURAGED PROPHET'S FLIGHT

# அதைரியம் அடைந்த ஒரு தீர்க்கதரிசி பயந்து ஓடுதல்

1 ராஜாக்கள் 19:1-8

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைவார்கள்." ஏசாயா 40:31

தீமையின் மேல் சத்தியத்தின், பாகாலின் மேல் தேவனுடைய ஒரு வெற்றியின் அடையாளம் தீர்க்கதரிசி எலியாவுக்கு மாபெரும் ஊக்கத்தைக் கொடுத்தது. அது தேவனுடைய வெற்றி, அதனிமித்தம் எலியா களிகூர்ந்தார். இந்த காரியத்தில் தெய்வீக பிரதிநிதியாக இருந்து அதிக அளவில் சந்தோஷமடைந்தார். இவர் ராணி யேசபேலின், எளிதில் அமைதிப்படுத்த முடியாத என்றென்றைக்குமான எதிரியாக ஆனார் என்பதை அவர் சீக்கிரத்தில் தெரிந்து கொண்டார். அலுள் இந்த காரியத்தை தேவனுக்கும் பாகாலுக்கும் இடையேயான போர் என்று பார்க்காமல், தனக்கும் தீர்க்கத்தரிசி எலியாவுக்கும் இடையேயான போர் என்று நினைத்தாள். அவளுடைய தீர்க்கதரிசிகள் கொல்லப்பட்டதை அறிந்து கோபமடைந்து எலியாவுக்கும் இதே கதிதான் என்று சொல்லியனுப்பினாள். காரியங்கள் இப்படி மாறும் என்று எலியா எதிர்பார்க்கவில்லை.ராஜாவை சந்தித்து எண்ணூற்றி ஐம்பது பாகாலின் தீர்க்கதரிசிகளை தண்டிக்க தைரியங்கொண்டிருந்த எலியா, ஒரு ஸ்திரீயிடமிருந்து வந்த ஒரு வார்த்தையினால் தைரியம் இழந்தார். அவர் வனாந்தரத்துக்கு ஓடினார். தனது ஜீவனை தப்புவித்துக்கொள்ள ஓடிய அவர் தனது ஜீவனை எடுத்துக்கொள்ளும்படி கர்த்தரிடம் ஜெபித்தார். என்ன விநோதம்!

கடந்த பாடத்தில் நாம் பார்த்த எலியாவின் மார்க்கம், சுவிசேஷ யுகத்தில் சபையின் அனுபவத்தை நிழலாக காண்பிக்கும் பொருட்டே கொடுக்கப்பட்டது என்பதை நாம் மறவாதிருப்போமாக. இந்த அம்சத்தை நாம் இன்னும் சோதித்து ஒரு நிழல் பொருளை கவனிப்போம்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யேசபேல் கர்த்தரின் சபையின் மக்களிடையே தப்பறையான போதகங்களை கற்பித்த ஒரு தப்பறையான சபை முறைமையை அடையாளப்படுத்துவதற்கு மாத்திரமல்ல, (அவளது கணவன் ஆகாப் சிவில் அதிகாரத்தையும், எலியா சபை வகுப்பாரையும் குறிக்கிறார்கள்) மூன்றரை வருடங்கள் மழை பெய்யாதிருந்தது கூட ஒரு நிழல் என்றும் வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்படுகிறது. மூன்றரை வருட காலப்பகுதி நான்கு தடவை குறிப்பிடப்பட்டு, அந்த காலப்பகுதியில் தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்கள் வனாந்தர நிலைமையில் பொதுவாக உலகத்தின் கண்களிலிருந்து மறைக்கப்பட்டதை குறிப்பிடுகிறது. அந்த காலப்பகுதியில் ஜனங்களிடையே ஆவிக்குரிய பஞ்சம் ஏற்பட்டது. இந்த மூன்றரை வருடங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் மூன்றரை காலங்கள் என்றும் ஆயிரத்தி இருநூற்றி அறுபது நாட்கள் என்றும், நாற்பத்தி இரண்டு மாதங்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (வெளிப்படுத்தின விசேஷம் 12:14; 12:6; 11:3; 13:5)

எனினும் வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிட்ட மூன்றரை காலங்கள் அடையாள பாஷையில் இருந்து, ஒரு நாள் என்பது ஒரு வருடத்தை குறிப்பிட்டு அது ஆயிரத்தி இருநூற்றி அறுபது வருடங்களைக் காண்பிக்கிறது. இந்த வருடங்கள் கிபி538 இல் ஆரம்பித்து 1798இல் முடிவடைந்தது என்று அநேகர் நம்புகிறார்கள். இப்படியாக காரியத்தை புரிந்து கொண்டவர்கள் 1798க்கு பிறகு வேதாகமத்தில் ஆர்வம் அதிகரித்து மழைக்கான (புத்துணர்ச்சி மற்றும் ஆசீர்வாதத்துக்கான) காலத்தை குறித்தது. அது கடந்த நூற்றாண்டு உலகத்திற்கு பெரிய அறிவொளியை கொண்டு வந்தது. எனினும் அந்த அடையாளமான வருடங்களை (ஆயிரத்தி இருநூற்றி அறுபது சொல்லர்த்தமான வருடங்களை) எலியாவின் வனாந்தர அனுபவங்களை மெய்யான காலப்பகுதியாக நாம் உபயோகிக்கலாம்.

இது உண்மையான உபயோகமாக இருந்தால் தேவனுடைய பரிசுத்தவான்களிடத்தில் ஒருஅளவான பயத்தையும் கோழைத்தனத்தையும் குறிப்பிடுவதாக இருக்கிறது. எலியா ஒளிந்துகொள்ள சென்றது பரிசுத்தவான்கள் மறைந்திருந்ததை குறிப்பிடுகிறது. அவர்கள் இரண்டாவது தடவையாக வனாந்தர நிலையில் இருந்த பொழுது தேவன் வழிநடத்தி முக்கியமான பாடங்களை போதித்தார். அவை எலியாவின் அனுபவத்திற்கு சம்பந்தப்பட்டதாக இருந்தன. பர்வதங்களை பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று காண்பிக்கப்பட்டது. ஆனால் அதில் கர்த்தர் வெளிப்படவில்லை. அது வல்லமையின் ஒரு விளக்கமாகவே இருந்தது. பிறகு அடுத்த பாடம் பூமி அதிர்ச்சி. அதிலும் கர்த்தர் வெளிப்படவில்லை. அதன் பிறகு அக்கினி உண்டாயிற்று. ஆனால் இதிலும் எலியாவால் கர்த்தரை உணர்ந்து கொள்ள முடியவில்லை. கடைசியாக அமர்ந்து மெல்லிய சத்தம் வந்தது. சத்தியமும் கிருபையுமான ஆச்சரியமான செய்தி வந்தது. எலியா மற்ற வெளிப்பாடுகளில் கர்த்தரை தெரிந்துகொள்ளாமல் இதில் தெரிந்துகொண்டார்.

மெய்யான எலியாவாகிய தேவனுடைய பரிசுத்த ஜனங்கள் தெய்வீக வல்லமையின் பல்வேறு வெளிப்பாடுகளின் வேறுபாடுகளை பல்வேறு செயல்கள் மூலம் கற்றுக்கொள்ளுகிறார்கள். சூறாவளியைப் போல வருகிற சச்சரவுகள் தற்கால சமூக முறைமைகளுக்கு அழிவை கொண்டு வருகின்றன. ஆனால் அது கர்த்தருடைய சத்தமல்ல, மனுக்குலத்தின் சத்தம், பூமி அதிர்ச்சி சமூக அமைதியின்மையை எழுச்சியை குறிக்கும். இதுவும் எலியாவுக்கு கர்த்தரின் செய்தியல்ல. உலகத்தில் அவர் பெற்றிருக்கிற வேறொரு சக்தி. அது அவரது குமாரனுடைய ராஜ்யத்திற்கு முன்னதாக தற்கால ஒழுங்குகளை குறிக்கிறது. இதுவும் கர்த்தரால் அல்ல. ஆனால் அனுமதிக்கிற வெறும் மனித உணர்வுகள். எலியா வகுப்பார் தங்களது இருதய காதுகளின் மூலம் கேட்கப்படும் அமர்ந்த மெல்லிய சத்தத்தின் மூலம் தேவனை புரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு மிகவும் அதிசயத்தக்க விதமாக கர்த்தரின் ஜனங்களிடத்தில் பேசப்படும் சத்தியத்தின் குரல், கர்த்தரின் வார்த்தையின் சத்தம். மெய்யான ஆகாப், யேசபேல் மற்றும் பிறருக்கு இன்னும் கேட்கப்படவில்லை. இது மெய்யான எலியா வகுப்பாருக்காகவே கொடுக்கப்படுகிறது.

### "நான் இன்னும் ஏழாயிரம் பேரை வைத்திருக்கிறேன்"

இந்த சத்தத்தை தாங்க முடியாமல் எலியா விசனமாயிருந்து, தேவனுடைய ஊழியக்காரர்களில் தான் மட்டுமே உயிரோடிருப்பதாக நினைத்து மரித்துபோவதற்கு விரும்பினார். தேவன் அவருக்கு கூறிய பதிலாவது: "பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையுடைய ஏழாயிரம் பேரை இஸ்ரயேலிலே நான் மீதியாக வைத்திருக்கிறேன்." அது போல இன்றைக்கு ஆவிக்குரிய இஸ்ரயேலரின் இரு வகுப்பார் இருக்கிறார்கள். ஒருவகுப்பார் உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டு வனாந்தர நிலைமையிலிருக்கிறது. இன்னொரு பெரிய வகுப்பார் உண்மையான தேவனைத் தவிர வேறு யாரையும் அங்கீகரிக்காமலும் மற்றவர்களுக்கு முழங்கால் முடங்காமலும் இருந்தாலும் இன்னும் பாபிலோனில் இணைந்து, பிணைந்து இருக்கிறார்கள்.

## A KING SOLD HIMSELF

# தன்னை விற்றுப்போட்ட ஒரு ராஜா

1 ராஜாக்கள் 21

“பொருளாசையாகிய விக்கர ஆராதனைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.” லூக்கா 12:15; கொலோசெயர் 3:5

எலியா ஆகாப் ராஜாவிடம் கூறியதாவது: “கர்த்தரின் பார்வைக்கு நீ பொல்லாப்பானதை செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய்.” பஞ்சத்தின் தாக்கம் படிப்படியாக மறைந்தது. ஆனால் அதன் அனுகூலமான பாடம் ராஜாவுடனும் ஜனங்களுடன் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இருந்தது. உண்மையான தேவன் சில அங்கீகாரங்களை பெற்றார். பாகாலின் செல்வாக்கு ஒரு குறிப்பிடத்தக்க அளவு உடைக்கப்பட்டது. எலியாவுக்கு எதிரான ராணி யேசபேலின் வெளிப்படையான அச்சுறுத்தல் கவலையை அளித்தது. அவர் திரும்பி வந்து இஸ்ரயேலில் பல்வேறு தீர்க்கதரிசிகளின் பள்ளிகளை நிறுவி அவைகளுக்கிடையே அவரே பிரதான ஆவியாக இருந்தார்.

இன்றைக்கு நமது பாடம் ஒரு பொல்லாத ஸ்திரீயின் அற்பத்தனமான பேராசையையும் மோசமான வல்லமையையும் காண்பிக்கிறது. ஆகாப் இரண்டு அழகான அரண்மனைகளைப் பெற்றிருந்தான். அவற்றில் தந்தத்தினால் ஆன ஒன்று யெஸ்ரயேலில் இருந்தது. இவைகளையெல்லாம் அவன் பெற்றிருந்தும் கூட அவன் சந்தோஷமாக இல்லை. நாபோத் என்பவனின் நல்ல திராட்சத் தோட்டத்தை தனக்காக எடுத்துக்கொள்ள விரும்பினான். அதற்கு பதிலாக வேறோரு நல்ல திராட்சைத் தோட்டதையோ அல்லது அதற்கான பணத்தையோ கொடுப்பதாக கூறினான். நாபோத், அது தனது பிதாக்களின் சுதந்தரமாக இருந்ததினால் எந்த விலைக்கும் விற்க மறுத்தான்.

இதன் பலனாக ராஜா ஏமாற்றமும், மன வேதனையும், எரிச்சலும் அடைந்தான். அவன் இருதயத்தில் பேராசையை அனுமதித்தான். அந்த திராட்சைத் தோட்டத்தை விரும்பினான். அவன் ராஜாவாக இருந்தான். ஆகையால் நாபோத் மறுத்ததை அவமரியாதையாகக் கருதினான். தனது குடும்ப சுதந்தரத்தை விற்பதை தேவனுடைய பிரமாணம் தடை செய்கிறது என்பதால் அதை விற்க மறுப்பதாக அறிவித்தான். இது ஒரு பிரயோஜனமற்ற காரியமாக இருந்தது. ஆனால் ஆகாப் சலிப்புடனும் சினத்துடனும் வீட்டிற்கு வந்து போஜனம் பண்ணாமல் படுத்துக்கொண்டான்.

ராணி யேசபேல் வந்து, அவனது வருத்தத்திற்கான காரணத்தை கேட்டாள். அவனது பதிலைக் கேட்டு, அவள் அந்த தோட்டத்தை தான் அவனுக்கு தருவதாக கூறினாள். உடனே ஆகாப்பின் பெயரால் நிருபங்களை எழுதி, அவன் முத்திரையை இட்டு பட்டணத்தின் மூப்பருக்கு அனுப்பினாள். அவர்கள் விரும்பினபடி செய்கிற இரண்டு பேரை தெரிந்து கொள்ளும்படி கடிதங்களில் எழுதப்பட்டிருந்தது.

1. மத நிந்தை உண்டாகும்படி ஒரு உபவாசம் என்று பிரசித்தப்படுத்த வேண்டும்.

2. அவர்கள் நாபோத்தை கனம்பண்ணும்படி உபவாசத்தின் பிரதானமான இடத்தில் வஞ்சகமாக நிறுத்த வேண்டும்.

3. மோசடி செய்கிற இரண்டு பேரை ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் உபவாசத்தில் தக்க சமயத்தில் மதத்தில் பக்தியுள்ளவர்களைப் போல நடித்து, நாபோத்துக்கு எதிராக, அவன் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான் என்றும் தங்கள் காதுகளால் அதைக் கேட்டோம் என்றும் ஒருவருக்கொருவர் உறுதிப்படுத்திக் கூற வேண்டும்.

4. தேவதூஷணத்திற்கு தண்டனையாக கல்லெறிந்து கொல்லும்படி அறிவித்து, தண்டனையை நிறைவேற்றி, இப்படியாக நாபோத்தை ஒழிக்க வேண்டும்.

யேசபேலின் இந்த மோசமான செயலை நாம் பலமாக எதிர்க்கிறோம். ஆனால் இக்காலத்திலும் இப்படிப்பட்ட காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ராணியின் யோசனைப்படி கல்லெறிந்து கொல்லும்படியான காரியம் இந்த நாகரீக தேசங்களில் நடக்காது என்பது உண்மை. எனினும் முற்காலத்தில் நான் வாழ்ந்திருந்தால் எனக்கு பிடிக்காதவர்களை கல்லெறிய சந்தர்ப்பம் இருந்திருந்தால் நான் செய்திருப்பேன் என்று கூறுகிறதை நாம் கேட்டிருக்கிறோம். உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். ஒருவன் திறமையாக ஒரு வியாபாரத்தை செய்து கொண்டிருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். பேராசையினால் தனக்கு உரிமையிருக்கிறது என்று கூறி போட்டியாக அண்டை வீட்டார் வியாபாரத்தை ஆரம்பிக்கிறார்கள். ஒருவேளை மற்றவன் வியாபாரத்தை முழுவதையும் எடுத்துக்கொள்ளும்படி குறைந்த விலைக்கு பொருட்களை விற்பனை செய்தால், மற்றவரை அவதூறு செய்தால் அது பேராசையின் செயல்பாடு இல்லையா? இது ஆகாப் ராஜாவின் செயல்பாடு இல்லையா? இது தேவனுடைய பார்வையில் கண்டிக்கத்தக்கது இல்லையா? தேவனை மதிக்கிறவர்கள் அவரது பொன்னான பிரமாணத்தை முழுமையாக புறக்கணிக்க தைரியம் கொள்வார்களா?

இன்னொரு உதாரணம்: ஒரு நல்ல வியாபாரம் செய்யும் ஒரு கடைக்காரருக்கு தற்போது மூன்று வருட ஒப்பந்தத்தின்படி பொருட்களை பெற்று வருகிற விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விநியோகிக்க தயாராயிருக்கிறார். அதை அவர் ஏற்றுக்கொள்கிறார். ஆனால் முன்னால் அவருக்கு கடந்த மூன்று வருடமாக விநியோகித்து வந்தவர் வியாபார பேராசையினால் கோபமடைந்து, பணக்காரராக இருப்பதால், முதல் கடைக்காரர் வியாபாரம் ஆகாமல் மூடும் வரை நஷ்டத்தில் பொருட்களை விநியோகிக்கிறார். ஆகையால் புது கடைக்காரன் கடையை மூடிவிடுகிறார். இது ஒரு வியாபார கொலையாக இருக்கிறது. அது நாபோத்தை கொலை செய்திருந்தது. உண்மையிலேயே பேராசையும் யேசபேலின் முறையும் தற்காலத்தில் பயன்படுத்தப்படுகிறது. இப்படியாக பிறரது பாண்டு, பத்திரங்களையும் பொன், வெள்ளி முதலானவைகளையும் ஆசைப்படுகிறார்கள். ஆகாப் பொல்லாப்பானதை செய்ய தன்னை விற்றுப்போட்டான் என்று தேவன் கண்டனம் செய்தார்.அப்படியென்றால், ஆகாப் காலத்தைக் காட்டிலும் வெளிச்சமும் அறிவும் அதிகமாயிருக்கும் இக்காலத்தில் செய்யும் காரியங்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்போகிறார்?

### “அந்த ஸ்திரீ யேசபேல்”

ராஜாவின் விருப்பப்படி நாபோத் செத்தான் என்ற செய்தி யேசபேலுக்கு வந்தது. அவள் ஆகாபை நோக்கி, நாபோத் செத்துப்போனான். அவனது திராட்சத் தோட்டத்தை நீர் சொந்தமாக எடுத்துக்கொள்ளும் என்று கூறினாள்.

ராஜா மனசாட்சி இல்லாதவனாக இருந்தான். சில காரியங்களில் ராணியைப் போல மோசமானவனாக இருந்தாலும் தைரியம் இல்லாதவனாக இருந்தான். நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை சொந்தமாக்கிக் கொள்ளும்டி எல்லா காரியங்களையும் செய்தான். எனினும் தான் கணக்குக் கொடுக்க வேண்டிய நீதியுள்ள தேவன் ஒருவன் இருக்கிறார் என்பதை அவன் உணரவில்லை.

பிறகு எலியா தேவ கட்டளைப்படி, எழுந்து சென்று ராஜாவை சந்தித்து கர்த்தரின் கட்டளைப்படி கூறியதாவது:“ நீ கொலை செய்ததும் அவனுடையதை எடுத்துக்கொண்டதும் இல்லையோ? நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின இடத்தில் உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும்.” இந்த தீர்க்கதரிசனம் ஆகாப்பின் மேல் சீக்கிரத்தில் நிறைவேறியது. ராஜாவின் மனோபாவத்தை கவனியுங்கள். அவன் கர்த்தரை மறந்து, வெறும் தீர்க்கத்தரிசியை நினைத்தான்.

ஆகாப் எலியாவை நோக்கி கூறியதாவது: “என் பகைஞனே, என்னைக் கண்டு பிடித்தாயா?” அதற்கு எலியாவிடமிருந்து வந்த பதிலாவது: “கண்டுபிடித்தேன்; கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப்போட்டாய். ”

பேராசை என்பது தற்காலத்தின் மிகவும் மோசமான தீமையாக இருக்கிறது. அது மற்ற எந்த பாவத்தைக் காட்டிலும் மிகுந்த மன வேதனையையும் துன்பத்தையும் தருவதாக இருக்கிறது.

# THE GREAT COMPANY AS LAVITES
# லேவியர்களாக திரள் கூட்டத்தினர்

லேவியர்கள் அவர்களது ஆசாரியர்களிலிருந்து பிரித்து வைக்கப்பட்டு, திரள் கூட்ட வகுப்பினருக்கு நிழலாக இருக்கும்படி நோக்கம் கொண்டு, அனைத்து திரள் கூட்டத்தாரும் அதே "பரம அழைப்புக்கு" அழைக்கப்பட்டு "ராஜரீக ஆசாரியர்களாக" இருக்கிறவர்களைப் போல பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டது ஏன் நிழலில் காண்பிக்கப்படவில்லை? லேவியர்கள் பிரகாரத்தில் மட்டும் அனுமதிக்கப்பட்டு, பரிசுத்த ஸ்தலத்தில் ஏன் நுழையவே இல்லை? அவர்கள் அபிஷேக எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுவதாக காண்பிக்கப்படவில்லை? என்று ஒருவர் கேட்டிருக்கிறார்.

கடைசி கேள்விக்கான பதிலாவது: பிரதான ஆசாரியனின் தலையில் ஊற்றும் அபிஷேக எண்ணெய் கீழே உடலுக்குச் செல்லுகிறது. உதவி ஆசாரியர்களுக்கு தனியாக அபிஷேகம் பண்ணப்படவில்லை. பிரதான ஆசாரியன் இறந்தால் மட்டுமே, அந்த இடத்திற்கு என உதவி ஆசாரியர்களில் ஒருவர் அபிஷேகம் பண்ணப்படுவார். இதன்படி பிரதான ஆசாரியன் அபிஷேகம் பண்ணப்பட்ட அனைவரையும் குறிக்கிறார். அவர் அவரது சரீரத்தின் அனைத்து அங்கங்களையும் அனைத்து உதவி ஆசாரியர்களையும் குறிக்கிறார்.

கேள்வியின் அடுத்த பகுதியை கவனிக்கும் போது பாவ நிவாரண நாளில் பிரகாரம் மற்றும் ஆசாரிப்புக் கூடாரத்தின் நிலைமைகள் தற்கால சுவிசேஷ யுகத்தின் தேவனுடைய திட்டத்தில் காரியங்களின் நிலைமையை குறித்தது என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். இந்த காலத்தில் பாளையத்தை விட்டு தேவனிடத்தில் அருகாமையில் இழுக்கப்படுவதற்கு விரும்புகிற அனைவரும் பிரகாரத்தை அடைவது நீதிமானாக்கப்பட்ட நிலைமையை, தேவனோடு நல்லிணக்கத்துக்கு வருகிற நிலைமையை குறிக்கிறது. பிரகாரத்தில் இருக்கிறவர்கள் மட்டுமே பலியிடுதல் மற்றும் பரிசுத்த ஸ்தலத்துக்கு நுழைவதற்கு சம்பந்தப்பட்ட காரியங்களை காண முடியும். இவர்கள் பரிசுத்த ஸ்தலத்தின் அருகே இழுக்கப்பட்டு, ஓர் அளவான நீதிமானாக்கப் -படுதலையும் நல்லிணக்கத்தையும் பெறுகிறார்கள். மேலும் அவருடனான முழுமையான நல்லிணக்கத்திற்கும் நீதிமானாக்கப்படுதலுக்கும் மிகவும் தயராகிறார்கள்.

தண்ணீர் தொட்டியில் கழுவுவது ஒரு முக்கிய படியாகும். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தின் கதவு அருகே சென்று தங்களை முன் வைக்கும் போது, அது முழு அர்ப்பணத்தை குறிக்கிறது. பிறகு திரைக்கப்பால் கடந்து செல்கிறார்கள்.

மிகச்சிலரே இப்படிப்பட்ட அர்ப்பணத்தை செய்கிறார்கள். அநேகர் கதவுக்கு வெளியே நிற்பதை விரும்புகின்றனர். "அறுவடை" காலம் வரும் போது (அது இப்போழுது வந்திருக்கிறது) அப்படிப்பட்ட அனைவரும் வெளியே தள்ளப்படுவார்கள். சொல்லப்பட்டபடி ஆயிரம் பேர் விழுவார்கள், ஒருவன் மட்டுமே நிற்பான். இவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாததினிமித்தமாக, அவரை மறுதலித்து, இப்படியாக தங்களது ஓரளவான நீதிமானாக்குதலை இழக்கிறார்கள். அது உயிரூட்டப்படாது. அதே போல, முழுமையாக அர்ப்பணம் செய்தவர்கள் கடுமையான சோதனைகளுக்கு உட்படுகிறார்கள். அதில் அவர்கள் உண்மையற்றவர்களாக காணப்பட்டால், அவர்கள் ராஜரீக ஆசாரியர்களாக இருக்கமாட்டார்கள். ஆனால் இது கர்த்தருக்கு ஊழியம் செய்யும் சில சந்தர்ப்பங்களுக்கு அபாத்திரர் ஆக நிரூபிப்பதில்லை. அவர்கள் லேவி வகுப்பாராக குறிப்பிடப்படுகிறார்கள். லேவியர்கள் அனைவரும் தேவனிடம் அர்ப்பணம் செய்தவர்கள். ஆனால் "முற்றும் ஜெயங்கொண்டவர்கள்," தெரிந்து கொள்ளப்பட்டு சோதனைகளில் நிலைத்து நின்று உண்மையுள்ளவர்கள் என்று நிரூபித்தவர்கள். இந்த சோதனைகளில் நிற்க முடியாதவர்கள் தெய்வீக சுபாவத்தை குறிக்கிற "பொன்" நிலைமையாக இருக்கிற பரிசுத்த ஸ்தல நிலைமைக்கு நிராகரிக்கப்படுவார்கள்.

### பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியர்கள் மட்டுமே

இவர்கள் ஆசாரியர்களுக்குரிய சுதந்தரத்தை இழந்து, இந்த நிலைமையை விட்டு வெளியேறி, நீதிமான்களாக்கப் -பட்டதில் மட்டுமே நிற்பார்கள். அதில் அவர்கள் நிலைத்திருந்தால் நித்திய ஜீவனுக்கு பாத்திரராக இருப்பார்கள். அவர்களது ஜீவன் மானிட ஜீவனாக இருக்காது. ஏனெனில் அதை ஆசாரியர்களாவதற்காக கைவிட்டார்கள். அவர்களது தோல்வி, பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அவர்களை பிரகாரம் நிலைமைக்கு பின்னுக்கு தள்ளுகிறது. ஆசாரியர்கள் மட்டுமே பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பார்கள். லேவியர்கள் மட்டுமே பிரகார நிலைமையில் இருப்பார்கள். ஆனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் அவர்களது சிந்தைகளில் பிரிக்கப்படும் போது அவர்களது நபர்களைப் பொருத்தவரை மற்றவர்களோடு இணைக்கப்படுகிறார்கள். ஆகையால் பிரகாரம் அதன் கடைசி பகுப்பாய்வில் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்களை குறிப்பிடுகிறது. அவர்களது உயிரூட்டப்பட்ட நீதிமானாக்கப்படுதல், அவர்களது வெள்ளை வஸ்திரங்கள் மற்றும் வெள்ளை திரைகள் மூலமாக குறிப்பிடப்படுகிறது. அது அவர்களை பாளயத்திலிருந்து பிரிக்கிறது. ஆனால் திரள் கூட்ட வகுப்பார் பாளயத்தில் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஆசாரியர்களோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள். பிரகாரத்தின் மெல்லிய வெள்ளை திரை வெள்ளி கொக்கிகளில் தொங்கவிடப்பட்டிருந்தன. இப்படியாக இந்த வகுப்பார் பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் "பொன்னினால்" குறிப்பிடப்பட்டவர்களுக்கு மாறாக, "வெள்ளியினால்" குறிப்பிடப்பட்டார்கள்.

### ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் தேசத்தில் சுதந்தரம் இல்லை

லேவி கோத்திரத்தார் மூலமாக நிழலாக காண்பிக்கப்பட்ட முழு சித்திரத்தை பெறுவதற்கு, அவர்கள் ஆசாரியர் நிலைமைக்கோ அல்லது ஆசாரியருக்கு ஊழியம் பண்ணும் நிலைமைக்கோ எப்படி வந்தார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் அனைவரும் இஸ்ரயேலர்களின் ஒரு பகுதியாக இருந்தார்கள். ஆனால் தேவன் அவர்களை அவருக்கென்று பிரித்தார். தேசத்தில் எந்த சுதந்தரத்தையும் தேவன் அவர்களுக்கு கொடுக்கவில்லை. அவர்களுக்குரிய எல்லா உரிமைகளும் நிறுத்திவைக்கப்பட்டு, அவர்கள் மற்ற கோத்திரத்தாரை சார்ந்து வாழும்படி செய்யப்பட்டது. இது ஏன் இப்படி இருந்தது? பதில் என்னவென்றால் இஸ்ரயேலின் எல்லா கோத்திரங்களின் "முதற்பேறானவர்களுக்கு" பதிலாக லேவியர்கள் கர்த்தரால் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். இப்படியாக லேவி

கோத்திரத்தார் "முதற்பேறானவர்களின் சபைக்கு" அடையாளமாக இருந்த இந்த கோத்திரத்திலிருந்து ஒரு ஆசாரிய குடும்பத்தை, ஆரோன் மற்றும் அவரது குமாரர்களை தெரிந்துகொண்டார். அவர்கள் ராஜரீக ஆசாரியராகிய இயேசுவையும் அவரது சபையையும் அடையாளப்படுத்தினார்கள். லேவி கோத்திரத்தார் அனைவரும் சபையின் முதற்பேறானவர்களையும், ஆரோனின் குடும்பம் "முற்றிலும் தெரிந்துகொள்ளப் -பட்டவர்களையும்" குறிப்பிட்டார்கள். உதவி ஆசாரியர்கள் தனிப்பட்ட விதத்தில் அபிஷேகம் பண்ணப்படாமல், அவர்கள் பிரதான ஆசாரியரின் சரீரமாக குறிப்பிடப்பட்டார்கள். மெய்யான உதவி ஆசாரியர்கள், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அவர்களது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தவில்லை யென்றால் தங்களது அபிஷேகத்தை இழப்பார்கள்.

### கர்த்தருடனான உறவு ஒவ்வொரு விபரத்தின் அறிவில் சார்ந்திருக்க அவசியமில்லை

காலக்கணக்கின் சகல காரியங்களையுமோ அல்லது ஆசாரிப்பு கூடார நிழல்களையோ அல்லது மற்ற சிறிய அம்சங்களையோ புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் அவன் அநாவசியமாக எரிச்சல் அடையக்கூடாது என்று சொல்ல விரும்புகிறோம். கர்த்தருடனான நமது உறவு ஒவ்வொரு விபரத்தைப் பற்றிய அறிவில் சார்ந்திருக்க அவசியமில்லை. நம்மில் அநேகர் இவைகள் எதையும் அறிந்து கொள்வதற்கு முன்பு, தெய்வீக திட்டத்தின் தத்துவத்தை நாம் அறிந்து கொள்வதற்கு முன்பு தேவனுடைய ஜனங்களாக இருந்தோம் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். ஆகையால் நாம் கர்த்தரிடத்தில் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்து, மீதமுள்ளவைகளுக்காக காத்திருக்க வேண்டும். அதை அவர் நமக்கு திறப்பார். உச்சக்கட்ட சோதனை, கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதுவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் இருந்த சோதனை. அவர் பிதாவானவருக்கு உண்மையுள்ளவராக இருந்தாரா? இதுவே நம்மீது உள்ள சோதனையாக இருக்கிறது. நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருப்போமா? இப்படியாக உண்மையுள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவன் "ஜெயங்கொண்டவன்." அவன் எல்லா சூழ்நிலைகளிலும் உண்மையுள்ளவனாக இருக்க முயற்சி செய்வான். அவன் தேவனுடைய கிருபையை கண்டடையாவிட்டாலும் அவன் நம்பிக்கை கொண்டிருப்பான்.

இந்த காரியங்களை புரிந்து கொள்வதில் உள்ள கஷ்டம் இதைக்குறித்து எழுதப்பட்டவைகளோடு இசைவுபடுத்தி தோல்வியடைவதாகக் காணப்படுகிறது. அர்ப்பணம் செய்த அனைவரும் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக் -கிறார்கள். ஆகையால் பூரணப்படுத்தப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஆவிக்குரிய தளத்தில் பிறக்க வேண்டும் என்ற உண்மையை உணர்ந்து, திரள் கூட்டத்தின் வகுப்பார் பூரணப்படுத்தப்படும் போது அவர்கள் ஆவியின் ஜீவிகளாக இருக்க வேண்டும் என்பதை காண்கிறோம். அவர்கள் அழைக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் குறிப்பிடப்பட்ட தெய்வீக சுபாவத்திற்கு உரிமை கொடுக்கப்படமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் மகிமையின் நிலைமைக்கு தங்களது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தவில்லை. ஆனால் அவர்கள் கர்த்தரை பற்றிக்கொண்டால், அவர்கள் தங்களது நீதிமானாக்கப்பட்ட நிலைமையை பராமரிக்கிறார்கள். கர்த்தரிடத்தில் அவர்கள் இழுக்கப்படும் போது இதை அடையவில்லை. ஆனால் அவர்கள் பிரகாரம் மூலமாக கடந்து அவர்கள் அர்ப்பணம் செய்த போது மற்றும் பிரதான ஆசாரியர் அவர்களது பரிகாரியாக அவர்களது அபூரணத்தை சரிபண்ணுவதற்காக தமது பலியின் புண்ணியத்தை அவர்களது பலிக்கு சாட்டும் போது அவர்கள் இதை அடைகிறார்கள். பிறகு அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். அந்த கணத்தில் அவர்கள் ஜீவனுக்காக நீதிமானாக்கப்பட்டார்கள். அவர்கள் மானிட ஜீவியத்தின் எல்லா உரிமைகளையும் அர்ப்பணம் பண்ணி ஆவியின் ஜெனிப்பித்தலை பெற்றார்கள். அதுதான் அவர்களது எதிர்கால நம்பிக்கைக்கு அடித்தளமாக இருக்கிறது. அவர்களது அபிஷேகம் பண்ணப்பட்டது நிறுத்தப்படாமல் அதாவது அவர்கள் மணவாட்டியாக இருப்பதும் கிறிஸ்துவின் சரீரமாக இருப்பதும் நிறுத்தப்படலாம். இந்த லேவியர்கள் அனைவரும் பூமிக்குரிய சுதந்தரத்திலிருந்து துண்டிக்கப்பட்டார்கள் என்ற உண்மையில் சபையின் தலையாகிய கிறிஸ்து இயேசுவுடன் முதற்பேறானவர்களாக இருப்பதற்கான வாய்ப்பை பெறும்படிக்கு அவர்கள் ஒரு பரலோக சுதந்தரத்தை பெற்றிருக்கிறார்கள்.

ஆசாரிப்பு கூடார சித்திரம் தற்காலிகமான ஒன்றாக இருந்தது. அது முடிவில் ஆலயத்துக்கு இடமளித்தது. ஆலயமானது சபையை அதன் மகிமையடைந்த நிலைமையை குறித்தது. எனினும் ஆலயத்தில் உள்ள பொருட்கள், தற்காலத்திற்கு தொடர்புடைய அணுகுதல் மேலிருந்து கீழ் கிழிக்கப்பட்ட திரையில் வெளியரங்கமாக குறிப்பிடப்பட்டது. இந்த திரை கிறிஸ்துவின் மாம்சத்தை அடையாளமாக குறிப்பிட்டது. கிழிந்த திரை மூலமாக திரைக்கு பின்னால் இருக்கிற பொருட்களை பார்க்கலாம். மேலும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல தயாராக இருக்கலாம்.

R4746

## THOSE WHO ARE REPROVED BY THE LIGHT

## வெளிச்சத்தினால் கண்டிக்கப்படுகிறவர்கள்

"மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது." மத்தேயு 5:16

கர்த்தருடைய வார்த்தை நமக்கு வெளிச்சமாகவும் நமது கால்களுக்கு தீபமாகவும் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. ஆனால் இங்கே அந்த கருத்தில் சொல்லப்படவில்லை என்று தெரிகிறது. நாம் சத்தியத்தை பிரகாசிக்க வேண்டும் என்பதே அதன் பொருளாக இருக்கிறது. இந்த வசனத்தில் ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட பரிசுத்தவான்களின் வகுப்பார் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்களைப் பற்றி தேவன் வேறொரு இடத்தில் அவர்கள் மூலம் சத்தியமானது மற்றவர்களுக்கு செல்ல அவர்கள் கவனம் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். மேலும் அவர்கள் முத்துக்களை பன்றிகள் முன் போடக்கூடாது. சத்தியத்தின் அனைத்து வெளிச்சமும் உலகத்தில் பிரகாசிக்க வேண்டும் என்பது அதன்

பொருளல்ல. உலகமானது சகல சத்தியத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கிறது. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள வெளிச்சம் என்பது வேறொரு இடத்தில் ஒளியூட்டுதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒளியூட்டுதல் சத்தியத்தின் மூலமாக மாத்திரமல்ல, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதல் மூலமாகவும் வருகிறது. இவர்களது வாழ்க்கையில் பரிசுத்த ஆவி ஒளியூட்டும் சக்தியாக ஆகிறது. ஆகையால் அவர்களது முழு வாழ்க்கையும் பிரகாசிக்க வேண்டும். அவர்களது முழு வாழ்க்கையும், "அவர்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய" ஒளியை காட்ட வேண்டும்.

இன்னொரு வசனம் சொல்லுகிறதாவது: "உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்" இந்த வெளிச்சம் தான் அல்லது வசனம் தான், அவர்களால் சகல செய்தியையும் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தாலும் மனிதர்கள் மேல் பிரகாசிக்க வேண்டும். ஆனால் ஒரு சமயம் சத்தியத்தை வெறுத்த அநேகர் நம்பிக்கை கொண்டு தேவனுடைய பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் அவர்கள் உணர்ந்த ஆவியின் வெளிச்சத்தினால் கர்த்தரிடத்தில் வழி நடத்தப்பட்டார்கள். அவர்களுடைய மனங்கள் இருண்ட காலத்தில் புகையினால் வெகுவாக மூடப்பட்டிருந்தன. ஆனால் அவர்கள் தேவனுடைய ஆவியினால் வழி நடத்த முடியாதபடி, நல்லிணக்கத்திற்கு வெளியே வெகு தூரத்தில் இல்லை. அவர் இயேசுவைப் பற்றிய அறிவைப் பெற்று அவரைப்பற்றி கற்றுக்கொண்டார்கள்.

உலகமானது சத்தியத்தை கர்த்தராகிய இயேசுவிடமிருந்தோ அல்லது அவரது சீஷர்களிடமிருந்தோ ஏற்றுக்கொள்ளும் என்று இதில் எந்த வசனத்திலும் குறிப்பிடப்படவில்லை. இருளானது அதை பற்றிக் கொள்ளாதிருந்தாலும், அவர் தமது வெளிச்சத்தை பிரகாசித்தது போல நாமும் நமது வெளிச்சத்தை பிரகாசிக்க பண்ண வேண்டும். சிலர் வெளிச்சத்தை எதிர்க்கிறார்கள். ஏனெனில் அவர்களது கிரியைகள் தீயவைகளாக இருக்கின்றன. எனினும் வேறு சிலரால் பல்வேறு விதமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதே இதன் கருத்தாக இருக்கிறது. ஆகையால் "நமது நற்கிரியைகளை மனுஷர்கள் காணும்படி நமது வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது." அவர்கள் இந்த கிரியைகளை சரியாகவோ அல்லது தீயதாகவோ எடுத்துக்கொள்ளலாம். சிலர் அதைப்பார்த்து மெச்சலாம். நமது கர்த்தரை எதிர்த்தவர்கள் பொது ஜனங்கள் அல்ல, தங்களை தேவனுடைய ஜனங்கள் என்று விசேஷமாக கூறிக்கொண்ட வேதபாரகர்களும் பரிசேயர்களும் ஆகும். அவர்கள் தங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தரநிலைக்கேற்ப வாழவில்லை. அவர்கள் கண்டிக்கப்பட்டார்கள்; இயேசுவின் போதனை ஒரு உயர்ந்த நிலையில் இருந்ததாக உணர்ந்தார்கள்.

இதே நிலைமையை இந்நாளில் நாம் காண்கிறோம். சத்திய செய்தியை மிகவும் எதிர்க்கிறவர்கள் சபை மூப்பர்கள், ஊழியக்காரர்கள், ஞாயிறு பள்ளி கண்காணிப்பாளர்கள் போன்றோர் ஆவர். சத்திய வெளிச்சத்தின் பிரகாசம் மற்றும் ஒளியால் அவர்கள் கண்டனம் பண்ணப்படுகிற அளவுக்கு தங்கள் சொந்த இருளில் தள்ளப்படுகின்றனர். அது அவர்களது சொந்த தரநிலையை மிகுந்த பாதகமாக காண்பிக்கிறது. அவைகள் நமது வாழ்க்கை முறையை உயர்ந்ததாக உணர்த்துகின்றன. பிறகு அவர்கள் பொறாமையால் நிரப்பப்படுகிறார்கள். யூதர்கள் இயேசுவை பொறாமையினால் பிலாத்துவிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் இருதயத்தில் மிகவும் தவறான மனோபாவத்தில் இருந்தார்கள்.

நம்மை வெறுக்கிறவர்களிடமும் அதே போல் இருக்கிறது. எனினும் ஒளியானது செல்வாக்கை பெற்றிருக்கிறது. சரியான போதனை எது என்பதை அவர்கள் அறியக்கூடும். சிலர் ஒரு நிலையை எடுப்பதில்லை. ஆனால் ஓரளவு பார்க்கிறார்கள். இயேசுவுடன் இருந்தவர்கள் சகல பாதகமான செல்வாக்குகள் இருந்தாலும், அவர்கள் இந்த வகுப்பினருடன் இணைந்தார்கள். அப்போஸ்தலர் பேதுரு நமது கவனத்தை ஈர்ப்பது போல சிலர் சந்திக்கும் நாளில் அவர்கள் இப்பொழுது சீஷர்களாக ஆகாமல் இருந்தால் கூட நமது நல்ல கிரியையை பார்த்து தேவனை மகிமைப்படுத்துவார்கள். முடிவில் முயற்சியானது முழு கிரியையும் வீணாகவில்லை என்பதை விளங்கப்பபண்ணும். சிலர் இப்பொழுது கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள். இந்த ஜீவிகளின் செல்வாக்கு எதிர்கால உலகத்திற்காக இருக்கும்.

கிறிஸ்து முழு உலகத்திற்கும் ராஜாவாக அறிவிக்கப்படு முன், தற்கால வாழ்க்கையில் கிறிஸ்துவின் சரீர அங்கங்களோடு மிகவும் நெருக்கமாக தொடர்புடைய அனைவரும், மனித காரியங்களில் இந்த கனத்திற்குரிய இடத்திற்கு கர்த்தரால் தெரிந்து கொள்ளப்படுகிறவர்களில் குணலட்சணத்தின் கம்பீரத்தையும் மேன்மையையும் அடையாளம் கண்டுக்கொள்ளக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் இயேசுவோடு இருக்கிறவர்கள் என்ற அவர்களைப் பற்றிய அறிவை எடுத்துக் கொள்ளக் -கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்

வெளியிடுபவர் :

சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர். சென்னை - 600 019.

கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com

Website : www.thestudiesinthescriptures. com

**FOR PRIVATE CIRCULATION ONLY**